விலை: 60.00
பக்கங்கள் : 20

website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி சங்குநாதம்

சங்கு 23
ஒலி 217 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 08 ஞாயிற்றுக்கிழமை (24.07.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## ஜீஎஸ்பி வரிச்சலுகையை இழந்துவிட வேண்டாம்

### தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கை



(கொழும்பு)

**ஜீஎஸ்பி பிளஸ் வரிச்சலுகையைப் பாதுகாப்பதற்காக மேற்கொண்ட உடன்படிக்கைகளை முழுமையாக பாதுகாத்துக் கொள்ளுமாறு ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை அரசாங்கத்திடம் அறிவித்துள்ளது.**

காலிமுகத்திடலில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குழுவினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டித்து ஐரோப்பிய ஒன்றியம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதில் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்து இலங்கையில் பொருளாதார மற்றும் நல்லிணக்க செயற்பாடுகளுக்காக தம்மை தொடர்ந்தும் அர்ப்பணிப்பதாக 19

## யாழ். பல்கலையில் ஜூலைக் கலவர நினைவேந்தல்



19

## மனித உரிமை பாதுகாப்பே அனைத்தையும் விட முக்கியம்

### அமெரிக்க வெளியுறவுக் குழு

(கொழும்பு)

அனைத்தையும் விட மனித உரிமை பாதுகாப்பு முக்கியமானது என அமெரிக்க செனட்டின் வெளியுறவுக் குழு தெரிவித்துள்ளது.

இலங்கையின் பாதுகாப்பு படையினரின் 19

## திங்கள்முதல் வாரத்தில் 3 நாட்களே பாடசாலை

(கொழும்பு)

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைக 19

## எரிபொருள் விநியோகத்தை துரிதப்படுத்துங்கள்

### ரணில் பணிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் எரிபொருள் விநியோகத்தை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு, ஜனா 19

# தமிழர்களின் பிரச்சினை தொடர்பில் அதீத கவனம்

### ரணில் மீதும் நம்பிக்கை வையுங்கள் பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவிப்பு



(கொழும்பு)

**தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் நானும் அதீத கவனத்துடன் செயற்படுவோம். எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஜனாதிபதி மீது நம்பிக்கை வைத்துச் செயற்பட வேண்டும் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.**

(19 ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலுக்கு சிறிது காலம் வழங்கிப் பார்ப்போம்

### அத்துரலிய ரத்ன தேரர்

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகாண புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சிறிது காலத்தை வழங்க வேண்டும் எனவும் பிரபுத்துவ அரசியல் சந்ததியின் இறுதி 19

## இரு வாரங்களுக்குள் சர்வகட்சி அரசை அமைக்க தீர்மானம்

### மனோ, றிசாட் உட்பட மேலும் 12 பேருக்கு அமைச்சுப் பதவி

(கொழும்பு)

அடுத்த இரண்டு வாரங்களுக்குள் சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இதனடிப்படையில், சர்வகட்சி அரசாங்கத் 19

## ஒன்றுகூடும் சுதந்திரம், பேச்சுரிமையை ஏற்கின்றோம்

### காலி முகத்திடல் தாக்குதல் தொடர்பில் பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ



(கொழும்பு)

சட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள பேச்சுரிமை மற்றும் ஒன்றுகூடும் சுதந்திரத்தை ஏற்றுக் கொள்வதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் 19

### போராட்டக்காரர்கள் மீது

## தாக்குதல் தொடர்பில் விவாதிக்க சபையை கூட்டுக

### பிரதமரிடம் எதிர்க்கட்சி கோரிக்கை

(கொழும்பு)

பாராளுமன்றத்தை நாளை திங்கட்கிழமை கூட்டுமாறு பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் சஜித் பிரேமதாஸ தலைமையிலான 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் நிர்வாகக் கிளையில் கடமையாற்றும் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் **ப. திருமாறன்** அவர்களின் அன்புத் தாயார்

அமரர் **பஞ்சாட்சரம் வனஸ்பதி**



தோற்றம் 27.01.1958 — மறைவு 22.07.2022

அவர்கள் 22.07.2022 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத் துயருடன்...
**பிரதேச செயலாளரும் அனைத்து உத்தியோகத்தர்களும்,**
**ஊழியர் நலன்புரிச் சங்கம்,**
**பிரதேச செயலகம், பருத்தித்துறை.** (C-4654)

## கணனி தட்டெழுத்தாளர் தேவை

சாவகச்சேரியில் இயங்கும் அலுவலகம் ஒன்றிற்கு தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தட்டச்சு செய்யக் கூடிய கணனி தட்டெழுத்தாளர் தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். (12241)

**077 487 7368**

## காணி விற்பனைக்கு

யாழ். கச்சேரிக்கு அண்மையாக பேரின்பநாயகம் வீதியில் 3 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (12230)

தொடர்பு
**076 675 7518**

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்.நகரை அண்மித்த பகுதியில் சிறிய குடும்பம் ஒன்று வசிக்கக் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை.

**077 745 1625**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி **நிரஞ்சனா சோமாஸ்கந்தன்** அவர்களின் அன்புத் தந்தையார்


அமரர் **சிதம்பரப்பிள்ளை மகேந்திரன்**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தியறிந்து துயரடைவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/ஸ்ரீ சோமாஸ்கந்த இந்து ஆரம்ப பாடசாலை, புத்தூர்.**

## கண்ணீர் அஞ்சலி



(12237)

2022.07.22ஆம் திகதி இறைபதமடைந்த எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் முன்னாள் உள்ளகக் கணக்காய்வாளரும் முன்னாள் ஆசிரியை திருமதி **சி. ஸ்ரீஜெனனி** அவர்களின் அன்புக் கணவருமாகிய

அமரர் **ஐ. சிவராசா**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தனை செய்வதுடன் அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள்,**
**கல்விசாரா உத்தியோகத்தர்கள்**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**
**யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி**

## We are HIRING
## Office Assistant

### Candidate Profile

- Ideal candidate should be a smart working person, who is willing to do a variety of office task under pressure.
- Basic computer literacy (MS Office packages)
- Passed GCE O/L
- Outgoing personality
- Age below 35
- Driving license (Motor bike) required
- A male candidate is preferred

(C-4650)

**Walk-in interview on 27-07-2022**
between 10.00 am to 12.00 noon

If you feel you are the right individual for the above position, then send us your updated CV through info@cciy.lk.

Chamber of Commerce and Industries of Yarlpanam
No-55, Kachcheri Nallur Road, Jaffna.
021 222 6608|09 info@cciy.lk

## மரண அறிவித்தல்

### செல்லையா சிவபாக்கியம்

பிறப்பு : 25.01.1939 இறப்பு : 20.07.2022



கோண்டாவில் தில்லையம்பதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சிவபாக்கியம் அவர்கள் கடந்த 20.07.2022 (புதன் கிழமை) அன்று இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கறுவல் - சின்னன் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சரவணை - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்லையா அவர்களின் அன்பு மனைவியும் நந்தகுமார் (உரிமையாளர் - சிவகாமி அரைக்கும் ஆலை, மஞ்சத்தடி வீதி, கோண்டாவில்), தயாளன் (பிரான்ஸ்), அனிசியா, சிவதர்சி (ஆசிரியை - யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, செல்லையா, நாகம்மா, ராசன், தம்பிஜயா, செல்லத்துரை, ராசரத்தினம், கிருஷ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற கந்தசாமி, பற்பனாவதி, இராஜலட்சுமி, கருணைமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும் சாந்தகுமாரி, ஜீவஜாழினி (பிரான்ஸ்), சிவானந்தம், கங்காதரன் (உரிமையாளர் - கங்கன் தச்சுத் தொழிலகம், மயிலணி வடக்கு, சுன்னாகம்) ஆகியோரின் அன்புமிகு மாமியாரும் விந்துஷா, கஜேந்தினி, அனிசா, அன்றியா (பிரான்ஸ்), ரிஷாந்தினி, ஜகிஸ்ணவி, பிரணதி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.07.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தில்லையம்பதி,
கோண்டாவில். (12226)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பணவீக்கம்

# 70 சதவீதமாக அதிகரிக்கும்

## மத்திய வங்கி தெரிவிப்பு

**(கொழும்பு)**

**இலங்கையின் பணவீக்கம் மேலும் அதிகரிப்பதற்கான சாத்தியம் காணப்படுவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.**


மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இதனை தெரிவித்துள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் செப்டெம்பர் மாதத்திற்குள் இலங்கையின் பணவீக்கம் 70 சதவீதமாக அதிகரிக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய உற்பத்தி மற்றும் அதன் மூலப் பொருட்களில் ஏற்பட்ட அதிகரிப்பே இதற்கு காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கியின் நிதியுதவியினால் இலங்கையின் பணவீக்கத்தினை சீர்செய்ய முடியாது. அது தற்காலிக தீர்வு மட்டுமே.

தற்போது இலங்கை எதிர்நோக்கிய நிதி, பொருளாதார மற்றும் ஏனைய பிரச்சினைகளை சீர் செய்ய புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முடியும் என நம்பு



வதாகவும் ஆளுநர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

## சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம்



(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருவதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஆகவே அத்தியாவசியமற்ற தேவைகளுக்காக ஒன்றுகூடுவதை தவிர்க்குமாறு அவர் பொது மக்களை கேட்டுக்கொண்டார்.

நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே மருத்துவர் ஹேமந்த ஹேரத் இந்த கோரிக்கையை விடுத்தார். (நி-6)

# ஜி.எஸ்.பி.வரிச்சலுகையை பாதுகாத்துக் கொள்ளுங்கள்

## ஐரோப்பிய ஒன்றியம் அறிக்கை

(கொழும்பு)

ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையைப் பாதுகாப்பதற்காக மேற்கொண்ட உடன்படிக்கைகளை முழுமையாக பாதுகாத்துக் கொள்ளுமாறு ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை அரசாங்கத்திடம் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் காலை அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குழுவினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டித்து ஐரோப்பிய ஒன்றியம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதில் ஜனநாயக உரிமைகளை பாதுகாத்து இலங்கையில் பொருளாதார மற்றும் நல்லிணக்க செயற்பாடுகளுக்காக தம்மை தொடர்ந்தும் அர்ப்பணிப்பதாக தெரிவித்துள்ளது.

அமைதியாக ஒன்றுகூடுவதற்கும் பேச்சுத் சுதந்திரத்திற்குமான பொதுமக்களின் உரிமையை உறுதிப்படுத்துமாறு ஐரோப்பிய ஒன்றியம் அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டுள்ளது. (நி-6)

# ஊழல்கள் நிறைந்த ராஜபக்ஷக்களின் நகலே ரணில்

## உலகப் புகழ்பெற்ற பொருளாதார நிபுணர் பகிரங்கம்

(வோஷிங்டன்)

இலங்கையின் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரிக்க வேண்டிய இடத்தில் உள்ளார் என அமெரிக்க பல்கலைக்கழகத்தின் பொருளாதார பேராசிரியர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் பயன்பாட்டு பொருளாதார பேராசிரியரான உலகப் புகழ்பெற்ற பொருளாதார நிபுணர் ஸ்டீவ் ஹான்கே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தனது உத்தியோக பூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவேற்றியுள்ளார்.

அவரது பதிவில் தொடர்ந்தும் தெரிவித்திருப்பதாவது,

1977 ஆம் ஆண்டு முதல் ரணில் விக்கிரமசிங்க ஆறு முறை இலங்கையின் பிரதமராக பதவி வகித்து ஊழல்கள் நிறைந்த ராஜபக்ஷக்களை காப்பாற்றியதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ரணில் என்பவர் ராஜபக்ஷகளின் நகல் என்பதனை தவிர வேறு ஒன்றுமில்லை.

மேலும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சொத்துக்களை கணக்காய்வு செய்ய வேண்டிய தருணம் இது எனவும் பேராசிரியர் ஸ்டீவ் ஹான்கே சுட்டிக்காட்டியுள்ளார். (நி-6)

# கோட்டா கோ கமவில் இருந்து

## வெளியேறும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்




(கொழும்பு)

கோட்டா கோ கம போராட்ட தளத்தில் இருந்து முதலுதவி முகாமை அகற்றுவதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

பண்டாரநாயக்க சிலைக்கு 50 மீற்றர் சுற்றளவில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடத்தில் ஒன்று கூடுவதைத் தடை செய்து நீதிமன்றம் முன்னதாக உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)


# மரண அறிவித்தல்

## திருமதி. வனஸ்பதி பஞ்சாட்சரம்



மணற்பகுதி புத்தூரை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி. வனஸ்பதி பஞ்சாட்சரம் 22/07/2022 ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார். அன்னார் செல்லக்கண்டு மற்றும் காலஞ்சென்ற உருத்திராதேவி ஆகியோரின் அன்பு மகளும், பஞ்சாட்சரம் (ஓய்வு பெற்ற கிளை முகாமையாளர் ப.நோ. கூ.சங்கம் அச்சுவேலி) அவர்களின் அன்பு மனைவியும், திருமாறன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், பருத்தித்துறை), சுரேன் (ஆசிரியர் வவுனியா செட்டிகுளம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவபாலன் சசிகலா, சதீஸ்குமார், ராஜ்குமார், ரவிச்சந்திரன் தாரணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பிரமிளாவின் மாமியாரும், அஸ்வன்யாவின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24/7/2022 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று 10.00 மணியளவில் கவுடுதா இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 716 7885
077 415 7854
077 645 5606


(12236)

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் நடைபெறும்

## சர்வதேச கால்பந்தாட்ட போட்டியில் களம் காணும் மன்னார் வீரர்



இந்தியாவில் நாளை நடைபெறவுள்ள சர்வதேச கால்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ள உள்ள 21 வயதுக்குட்பட்ட இலங்கை தேசிய அணியில் மான்னார் மாவட்டத்தை சேர்ந்த ஜூட் ரோஜன் கௌசிகன் தேசிய அணி வீரராக தெரிவாகி இலங்கை அணியை பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடவுள்ளார்.

மன்னார் மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மாணவனும் சென்/ஜோசப் விளையாட்டு கழக வீரருமாவார்.

மன்/புனித சவே ரியார் ஆண்கள் கல்லூரி கால்பந்தாட்ட அணியில் தலைவராக விளையா டிய இவர் இவ்வ டம் இடம்பெற்ற தேசிய அணிக்கான தெரிவில் சிறப்பாக விளையாடியதை தொடர்ந்து தேசிய அணியில் இடம் பெற்றதுடன் தற்போது இந்தியாவில் இடம் பெறவுள்ள போட்டிக்கு மன்னார் மாவட்டம் சார்பாக இலங்கை அணியில் விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-285)


## மரண அறிவித்தல்

தாயின் மடியில் 19 - 08 - 1944



ஆண்டவன் அடியில் 23 - 07 - 2022

### சிதம்பரப்பிள்ளை மகேந்திரன் [பட்டர்]

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் வடக்கு வேலடி ஒழுங்கையை (யார்வத்தை வீதி) வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை மகேந்திரன் நேற்று (23.07.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இரத்தினம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் நிரஞ்சனா (ஆசிரியர்-புத்தூர் சோமாஸ்கந்த இந்து ஆரம்பப் பாடசாலை), நிதி (நியூசிலாந்து), ஆகியோரின் பாசமிகு தந்தையும் சோமாஸ்கந்தன் (RDHS வவுனியா), ஆனந்தராஜன் (லம்போ-நியூசிலாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், பத்மாவதி, இராசமலர் மற்றும் மனோகரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், மகேஸ்வரி, பாக்கியலட்சுமி, பஞ்சலிங்கம் மற்றும் பேரின்பநாயகி ஆகியோரின் மைத்துனரும் கிசோபன், அபிசாந், அபர்ணா, அமரன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.07.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நிறைவு பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கந்தன்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 670 1793 (C-4655) *தகவல்: குடும்பத்தினர்*


## ஆன்மீகப் பணிக்காக தன்னை அர்ப்பணித்த பெருந்தகை செல்வி ஓங்காரரூபி சண்முகநாதன்



ஓய்வுபெற்ற படவரைஞரும் நல்லூர் சிவகுரு ஆதீனத்தின் செயலாளருமான செல்வி ஓங்காரரூபி சண்முகநாதன் அவர்கள் நம் மத்தியில் இல்லாமை இட்டு நிரப்பமுடியாத இழப்பாகும்.

நேற்றிருந்தவர் இன்றில்லை என்ற நிலையாமை ஒன்றுதான் இவ்வுலகிற்கு இருக்கக்கூடிய பெருமை என்று வள்ளுவப் பெருமான் உரைத்தருளிய தத்துவத்தை நினைத்துப் பார்க்கின்றோம்.

செல்வி ஓங்காரரூபி சண்முகநாதன் அவர்கள் வாழுங் காலத்தில் இறைஞானத்தின் மீது அதீத நாட்டம் கொண்டிருந்தவர்.

சிவபூசை செய்வதை நித்திய கருமமாகக் கொண்ட சந்தானத்தில் பிறந்த அவர் மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைக் கற்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து வேலணை மத்திய கல்லூரியில் தனது மேற்படிப்பைத் தொடர்ந்தார்.

படவரைஞர் பதவியில் சேர்ந்த அவர் மும்மொழிப் புலமைமிக்கவராக விளங்கினார்.

1991ஆம் ஆண்டு தீவகத்தில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக அப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்துக்கு வந்தபோது, செல்வி ஓங்காரரூபி அவர்கள் தன் பெற்றோர்களுக்காகவும் தன்னை நம்பி அங்கிருந்தவர்களுக்காகவும் மண்டைதீவில் தங்கியிருந்து முதியவர்களைச் செம்மையாகப் பராமரிக்கும் பெரும் பணியை ஆற்றியவர்.

பின்னாளில் தவத்திரு வேலன் சுவாமிகளின் ஆன்மீகப் பணியில் தன்னை இணைத்துக் கொண்டு சிவகுரு ஆதீனத்தின் நிர்வாகப் பணிகளைச் செய்து வந்தார்.

வேதாந்த தத்துவங்கள் மீது ஈர்க்கப்பட்ட அவர் கந்தர்மடம் வேதாந்த மடத்தின் வரலாற்றை நூலுருவாக்கி வெளியிட்டதுடன் வலம்புரிப் பத்திரிகையின் செய்தி ஆசிரியராகவும் சின்மய சஞ்சிகையின் ஆசிரியராகவும் இருந்து அளப்பெரும் சேவையாற்றினார்.

அவரின் திடீர் மறைவு ஜீரணிக்க முடியாததாயினும் அவரின் புனித ஆத்மா நல்லைக் கந்தப்பெருமானின் திருவடிகளில் பேரின்பம் பெற, இன்றைய நாள் நல்லூர் சிவகுரு ஆதீனத்தில் இடம்பெறும் அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் பங்கேற்று பிரார்த்திப்போமாக.

**செல்வி த.சிவப்பிரகாசம்**
*ஓய்வுநிலை ஆசிரியை*

## கலைமதி சொக்கர் மாஸ்டர்ஸ் பிறீமியர் லீக் கால்பந்தாட்ட தொடர்

இறுதிப் போட்டிக்குள் யங்கம்பன்ஸ்



வடமராட்சி உதைபந்தாட்ட லீக் ஆதரவுடன் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கலைமதி சொக்கர் மாஸ்டர்ஸ் பிறீமியர் லீக் கால்பந்தாட்ட தொடரில் நேற்று முன்தினம் நடைற்ற பன்னிரெண்டாம் நாள் ஓர் அரை யிறுதிப் போட்டி Youngmp ans Lions அணிக்கும் SK Raiders அணிக்கும் இடை யில் நடைபெற்றது.

மேற்படி போட்டியின் இறுதி நிமிடத்தில் யங்கம்பன்ஸ் லயன்ஸ் அணியின் பிரகாஷ் அடித்த ஒரு கோலுடன் 1:0 என்ற கோல் கணக்கில் யங்கம்பன்ஸ் லயன்ஸ் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குள் முதல் அணியாக நுழைந்தது.

போட்டியின் நாயகனாக யங்கம்பன்ஸ் லயன்ஸ் அணியின் கோற்காப்பாளர் இராஜகாந்தன் தெரிவு செய்யப்பட்டார். (4)







## வாகன சாரதி தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனமொன்றுக்கு வாகன சாரதி தேவை.
வயது 40 இற்கு மேல். யாழ். நகருக்கு அண்மையில் இருப்பவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

**076 097 3121**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்காவது தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுங்கள்

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் வலியுறுத்து

(கொழும்பு)

தடுப்பூசி கையிருப்புகள் காலாவதியாகும் நிலையில் உள்ளதால், நான்காவது தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுமாறு இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் பொது மக்களை வலியுறுத்தியுள்ளது.

பொருளாதார நெருக்கடியைக் கருத்திற் கொண்டு, இலங்கைக்கு மீண்டும் கொரோனா தடுப்பூசிகளை இறக்குமதி செய்ய முடியுமா என உறுதியாக தெரியவில்லை என சங்கத்தின் தலைவரான உபுல் ரோஹன தெரிவித்துள்ளார். மேலும் எதிர்காலத்தில் நான்காவது டோஸைப் பெறாவிட்டால், பொதுமக்கள் மீண்டும் வைரஸ் தொற்றுக்கு ஆளாக நேரிடும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-6)

# உணவுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்படலாம்

(கொழும்பு)


சில அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் எதிர்காலத்தில் குறைக்கப்படலாம் என வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

சந்தையில் பொருட்களுக்குத் தட்டுப்பாடு இல்லை, திறந்த கணக்குகள் மூலம் அத்தியாவசிய பொருட்களின் இறக்குமதி ஆரம்பிக்கபட்டுள்தாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி-6)

# மரண அறிவித்தல்

## அமரர். முருகன் கந்தையா

**பிறப்பு : 24.12.1930 இறப்பு : 22.07.2022**



V.C.C Lane, மாவிட்டபுரம் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர்.முருகன் கந்தையா (ஓய்வு பெற்ற அம்புல்ன்ஸ் சாரதி ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பளை) 2022.07.22 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகன் நாகி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இளையாச்சியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சங்கரன் கைராசியின் மருமகனும், காலஞ்சென்றவர்களான கிட்டுணன், சரவணன், செல்லையா, சின்னாச்சி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார். காலஞ்சென்ற பத்மாவதி மற்றும் நாகேஸ்வரன், ரஞ்சினிதேவி, ஸ்ரீகாந்தரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, மங்கையர்க்கரசி மற்றும் யோகராசா, கிருசாந்தினியின் பாசமிகு மாமனாரும் ஆவார். பத்மலோஜினி, காலஞ்சென்ற வினோதா மற்றும் தர்மினி, கௌசலா, தர்சினி, சதின்ரன், சாளினி, ஜீவிதா, சங்கீத், பிரியங்கா, மோகன்ராஜ், பிரியதர்சன், சஞ்சுதன், பிரியந்தி, கவிஷாந், ஜபிவர்சன் மற்றும் ஸ்கந்தராஜா, விஜயகுமார், சிவகுமார், டெறிற்றன், துஷாந்தன், லெக்சனா ஆகியோரின் பேரனும், சந்தோஷ், கஷ்மிகா, அக்ஷயா, கர்ணிகா, திருகர்சன், சகானா, பிரகர்ஷா, இகந்திகா, திருஅபினாஷ் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 24.07.2022 இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தெல்லிப்பளை (C-4648)

தகவல்:-
குடும்பத்தினர்.

# இராசிபலன்

24.07.2022
ஆடி 08, ஞாயிற்றுக்கிழமை
ஏகாதசி பிற்பகல் 4.23 மணிவரை

ரோகினி பின்னிரவு 12.56 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவரை
இராகுகாலம் 4.32-6.02 மணிவரை

ஏகாதசி விரதம்
சந்திராஷ்டமம் - சித்திரை, சுவாதி

**வளவன்**




துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் நாள், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள்.




பிற இனத்தவர்களால் பெருமைகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், திட்டமிட்ட காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், போசன சுகமுண்டு.




பக்குவமாகப் பேசி காரியங்கள் சாதிக்க வேண்டிய நாள், புதிய நட்பால் விரயங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழிலில் முன்னேற்றம் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.




நண்பர்களுக்குள் நிலவிய கசப்புணர்வுகள் அகலும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், சமார்த்தியமான பேச்சுக்களால் காரியம் சாதிக்க வேண்டிய நாள்.




சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, சேமிப்புக்கள் கரையக்கூடிய நிலை ஏற்படலாம், விட்டுக் கொடுத்துச் செய்வதால் வெற்றி கிடைக்கும் நாள்.




பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.




இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.




மனதில் தோன்றுவதைச் செய்வீர்கள், தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பயணங்களால் பலனுண்டு.




பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், சந்தித்தவர்களால் சந்தோஷம் கிடைக்கும் நாள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் வேலைகள் உனக்கு சமாதிகட்டி விடாமல் பார்த்துக்கொள்.

# காலிமுகத்திடலில் இடம்பெற்ற தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து யாழில் போராட்டம்

**(யாழ்ப்பாணம்)**
**காலிமுகத்திடலில் இடம்பெற்ற தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து யாழ்ப்பாணத்தில் கண்டன போராட்டம் நேற்று சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.**



காலிமுகத்திடலில் உள்ள "கோட்டா கோ கம" பகுதிக்குள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நுழைந்த முப்படையினர் மற்றும் பொலிஸார் அங்கிருந்த கொட்டகைகளை அகற்றியதுடன் போராட்டக்காரர்கள் மீதும் கடுமையான தாக்குதலை மேற்கொண்டனர். குறித்த சம்பவத்தை முன்னிட்டே போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (4-6-18-33-104)



"கோல்பேஸ் போராட்டக்காரர்கள் மீதான ரணில் - ராஜபக்ஷக்களின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை வன்மையாக கண்டிப்போம்" எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தின் முன்பாக இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## இலட்சார்ச்சனை உற்சவம்

(குப்பிழான்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த இலட்சார்ச்சனை உற்சவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் விசேட அபிஷேக பூசைகளுடன் ஆரம்பமானது.

தொடர்ந்தும் பத்துத் தினங்கள் இவ்வாலய இலட்சார்ச்சனை சிறப்பாக இடம்பெற உள்ளதுடன் ஆடிப்பூர நன்னாளான எதிர்வரும் 1 ஆம் திகதி திங்கட்கிழமை அம்பாளுக்கு ருதுசாந்தி வைபவம் இடம்பெற்று இலட்சார்ச்சனை உற்சவம் நிறைவுபெறும்.

அதனைத் தொடர்ந்து அம்பிகை கைலாச வாகனத்தில் வெளிவீதி உலா வரும் திருக்காட்சியும் இடம்பெறும் என மேற்படி ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (4-6-18)

## வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 1 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. 8 ஆம் திக்தி திங்கட்கிழமை தீ மதிப்பு திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை சப்பறத் திருவிழாவும் 10 ஆம் திகதி புதன்கிழமை தேர்த் திருவிழாவும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும் என ஆலயபரிபாலன சபை அறிவித்துள்ளது. (4-6)

## நம் மண்ணில் நடமாடிய தெய்வத் திருவுருவம் சிவஸ்ரீ ஜம்பு. மகேஸ்வரக் குருக்கள்



**நீலகண்டப் பெருமானின் திவ்ய அனுக்கிரகம் பெற்று என்றும் சிரஞ்சீவியாக வாழும் எனது இரு கண்மணிகள் போன்ற மகனாருக்கு அன்புடன் அருமைத் தாயார் எழுதிக் கொள்வது...**

எங்கள் போற்றுதலுக்கும் வழிபாட்டிற்குமுரிய நயினை சிவஸ்ரீ ஜம்பு கேஸ்வர மகேஸ்வரக் குருக்கள் இவ்வையகத்தில் இன்றில்லை என்ற பிரிவுத் துயரோடு அவர் பற்றிய மனப்பதிவுகளை மீட்டுப் பார்க்கின்றோம்.

1999 ஆம் ஆண்டு டிசெம்பர் 20 ஆம் நாள் வலம்புரிப் பத்திரிகை முகிழ்த்த போது, அதில் எங்கள் வணக்கத்திற்குரிய மகேஸ்வரக் குருக்கள் அவர்களின் ஆசியுரை முதன்மையாக இடம்பெற்றிருந்தது.

அன்று தொடக்கம் அவரின் இறுதிக் காலம் வரை ஐயாவுடன் எமக்கும் வலம்புரிக்குமான தொடர்பு இடையறாது நீண்டு சென்றது.

வலம்புரிப் பத்திரிகை வாழ வேண்டும் என்று அவர் வாழ்த்திய வாழ்த்தின் காரணமாக வலம்புரிச்சங்கு இவ்வையகத்தில் தர்மத்தின் குரலாக ஒலித்து நிற்கிறது. எங்கள் அந்தணச் சிவாச்சாரியர்களின் தலைமைக் குரு பீடாதிபதியாக விளங்கிய மகேஸ்வரக் குருக்கள் ஆழ்ந்தகன்ற அறிவு ஞானம் மிக்கவர். அவரின் தோற்றப் பொலிவு தெய்வீகத் தன்மை நிறைந்தது.

அவரைக் கண்ட மாத்திரத்தில் கைகள் கூப்பி வழிபடுமளவில் அவரின் மெய்ஞானத் தோற்றம் தெய்வீகத்தின் வெளிப்பாடாக அமைந்திருந்தது.

நான் கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக இருந்த போது அங்கு நயினாதீவைச் சேர்ந்த திருமதி. சொர்ணம்மா மகேஸ்வரநாதன் அவர்கள் சிரேஷ்ட ஆசிரியராக இருந்தார்.

மகேஸ்வரக் குருக்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கல்வி கற்ற போது, நயினாதீவில் இருந்த அவரது தாயார் மீனாம்பாள் அம்மா, தான் ஐந்தாம் வகுப்புப் படிக்கும் போது தன்னைக் கொண்டு அவருக்கு கடிதம் எழுதுவார் என்றும் அவ்வாறு எழுதப்படுகின்ற கடிதத்தின் தொடக்கத்தில்,

**தில்லையில் நடனமாடும் திரு**

என்பதாக அந்தக் கடிதம் அமையும் என்று கூறினார். இதனை ஒரு முறை நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய ஆடிப் பூரத் திருவிழாவில் வைத்து சிவஸ்ரீ. மகேஸ்வரக் குருக்களிடம் ஆசிரியை மகேஸ்வரநாதன் ஞாபக மூட்டிய போது, அவர் தன் தாயாரை நினைந்து கண்ணீர் சொரிந்ததாக ஆசிரியை கூறியிருந்தார்.

உண்மை, மிகவும் நெகிழ்ந்த மனம், யாருக்கும் தீங்கு நினையாத திருவுள்ளம். எவரையும் மதிக்கின்ற மாண்பு என அனைத்து உயர் பண்புகளையும் தன் அணிகலன்களாகக் கொண்டமைந்த மகேஸ்வரக் குருக்கள் ஐயாவுடன் நாம் பழகுகின்ற பெரும் பேறு பெற்றோம் என்பது மிகப் பெரும் மன நிறைவைத் தருகின்றது.

அதேவேளை இன்று அவர் எம்மோடு இல்லை என்ற ஆற்றாமை ஒரு புறம் இருந்தாலும் அவரின் புனிதமான ஆத்மா எங்களை என்றும் ஆசீர்வதிக்க வேண்டி அவரின் பொன்னார் திருவடிகளில் எம் தலை வைத்து பணிகின்றோம்.

ஓம் சாந்தி

**என்.விஜயசுந்தரம்**
**பிரதம ஆசிரியர், வலம்புரி.**

## பணம் பறிக்கும் கும்பல் தொடர்பில் மக்கள் அவதானம்!

(கரணவாய்)

ஏழைகளை குறி வைத்து பணத்தை அபகரிக்கும் கும்பல் அதிகரித்து வருவதுடன் வடமராட்சியில் வறிய குடும்பத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் 7500 ரூபாய் பணத்தைக் கொடுத்து ஏமாறிய சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் பதிவாகியுள்ளது.

வடமராட்சியில் ஆசிரியை ஒருவர் மேலதிக வகுப்பை நடத்தி வந்துள்ளார். இந்நிலையில் குறித்த ஆசிரியையின் தொலைபேசிக்கு மருத்துவர் ஒருவர் கதைப்பதாகவும், தனது தாயின் ஓராண்டு நினைவிற்காக வறிய மாணவர்களுக்கு உதவி செய்யவுள்ளதாகவும், அவ்வாறு யாராவது இருப்பின், அவர்களின் தொலைபேசி இலக்கத்தை தருமாறும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தமது பாடசாலை அதிபருடன் கலந்தாலோசித்து வறிய குடும்பத்தைச் சேர்ந்த 3 மாணவிகளின் பெற்றோரின் இலக்கத்தை குறித்த நபருக்கு கொடுத்துள்ளார்.

குறித்த நபரும் உதவி செய்வதாக கூறி நெல்லியடி சந்திக்கு வருமாறும் அங்கு 7500 ரூபாய் பணத்தை வைப்பிலிடுமாறும் கூறியுள்ளார்.

அதில் ஒரு தாய் 7500 ரூபாவை வைப்பிலிட்டுள்ளார். இரவு 8 மணி வரை காத்திருந்த பின்னர் அவரிடம் தொடர்பு கொண்ட போது அழைப்பை ஏற்படுத்த முடியவில்லை.

குறித்த விடயம் தொடர்பாக குறித்த ஆசிரியைக்கு அறிவிக்கப்பட்டதுடன் ஏமாற்றமடைந்த விடயமும் தெரிய வந்துள்ளது. இவ்வாறு பல சம்பவங்கள் நடைபெற்று வருவதுடன் இதனால் மக்கள் விழிப்புணர்வோடு நடந்து கொள்ளுமாறும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (4-6-60)

## மணல் கடத்தியவர் மடக்கிப் பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுழிபுரம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணலை ஏற்றிச் சென்ற உழவு இயந்திரத்தை வட்டுக்கோட்டை பொலிஸார் மடக்கி பிடித்து, சாரதியையும் கைது செய்துள்ளனர்.

சுழிபுரம் பத்திரகாளி அம்மன் ஆலயத்திற்கு அருகில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மணலுடன் கைப்பற்றப்பட்ட உழவு இயந்திரத்தையும் அதன் சாரதியையும் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று சாரதியிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-6-33-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 353
Viber 076 636 3378



# ஊழல் குற்றமும் இனப்படுகொலையும் ஒன்றல்ல!

## நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதமர் உருத்திரகுமாரன்

பொருளாதார நெருக்கடியால் இலங்கையில் மக்கள் போராட்டம் 100 நாட்களை எட்டித் தொடர்கிறது. நாட்டைவிட்டு வெளியேறி சிங்கப்பூரில் தஞ்சமடைந்திருக்கிறார், ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ. இச்சூழலில் "போர்க் குற்றவாளியான கோட்டாபயவை ஓட ஓட விரட்டுவோம்... நீதியின் முன் நிறுத்துவோம்..." என்ற முழக்கத்தோடு தமிழர் வாழும் நாடுகளில் போராட்டங்களை முன்னெடுத்து வருகிறது நாடுகடந்த தமிழீழ அரசாங்கம். இது குறித்தும், இலங்கைச் சூழல் குறித்தும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விசுவநாதன் உருத்திரகுமாரன் தமிழ்.நாட்டில் இருந்து வெளிவரும் ஜூனியர் விகடன் இதழுக்கு வழங்கிய செவ்வி அப்படியே இங்கு பிரசுரமாகிறது.(ஆ-ர்)

➤ **"இலங்கையின் தற்போதைய மக்கள் தன்னெழுச்சியை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?"**

"சிங்கள மக்கள் சிங்கக் கொடியின் கீழ் 'அறகள' என்ற முழக்கத்துடன் மேற்கொள்கிற கிளர்ச்சியைக் கூர்ந்து கவனித்து வருகிறோம். ஆட்சியாளர்களின் ஊழல், நிர்வாகச் சீர்கேடு போன்ற விடயங்களை



மட்டுமே முதன்மைப்படுத்தி கிளர்ச்சியாளர்கள் போராடுகிறார்கள். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றியோ, இனப்படுகொலைக்கான பொறுப்புக்கூறல் பற்றியோ கிளர்ச்சியாளர்கள் எங்கும் பேசவில்லை.

தமிழ் மக்களை அழிப்பதற்கும் ஒடுக்குவதற்கும் அவர்களின் அடையாளத்தை நீக்குவதற்கும் செய்த, செய்து வருகிற இராணுவச் செலவினம் இந்தப் பொருளாதார நெருக்கடிக்கு முக்கியதொரு காரணியாகும். போர் முடிந்த பின்னர் கூட இலங்கையின் இராணுவச் செலவு, போர்க்காலத்தைவிட அதிகரித்தே உள்ளது. இலங்கைக் கடற்படை 38,000 வீரர்களைக் கொண் டுள்ளது. இலங்கையின் சனத் தொகையைவிட 64 மடங்கு அதிக சனத்தொகையைக் கொண்ட இந்தியாவில் 67,228 கடற்படை வீரர்களே உள்ளனர். இலங்கையின் அதிகரித்த இராணுவச் செலவினங்களுக்கும் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கும் உள்ள தொடர்பை அமெரிக்காவின் முக்கிய பத்திரிகைகளான நியூயோர்க் டைம்ஸ், வோஷிங்டன் போஸ்ட் ஆகியன சுட்டிக்காட்டியுள்ளன. கூடவே சீனாவின் பாரிய கடன் பொறிக்குள் இலங்கை தன்னை அடகு வைத்தமையையும் காண்கின்றோம்."

➤ **"இலங்கையை இந்த நிலைக்குத் தள்ளியவர்கள் என்று யாரையெல்லாம் குற்றம் சாட்டுகிறீர்கள்?"**

"இலங்கைத்தீவு முழுவதுமே சிங்களர்களுக்கு என்ற மன நிலையில் உள்ள சிங்கள பௌத்த பேரினவாதமும், அதன் கட்டியெழுப்பப்பட்ட இராணுவச் செலவினங்களும், கூடவே ராஜபக்ஷ தரப்பினரின் ஊழலும், அவர்களது ஆட்சித்திறமையின்மையுமே இலங்கையை இந்த நிலைமைக்குத் தள்ளியுள்ளன. ராஜபக்ஷ சகோதரர்களை சிங்கள மக்களே கடுமையாக எதிர்க்கிறார்கள். 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்' என்ற சிலப்பதிகார வரிகள்தான் ஞாபகத்திற்கு வருகின்றன. ஆனால், சிங்கள மக்கள் ராஜபக்ஷக்களை எதிர்ப்பதற்கான காரணங்கள் வேறு, தமிழ் மக்கள் எதிர்ப்பதற்கான காரணங்கள் வேறு. ஊழல் குற்றத்தையும், இனப்படுகொலைக் குற்றத்தையும் ஒரே தராசில் வைத்துப் பார்த்துவிட முடியாது. இந்த வேறுபாட்டை சர்வதேச

> **இலங்கைத்தீவு முழுவதுமே சிங்களர்களுக்கு என்ற மனநிலையில் உள்ள சிங்கள பௌத்த பேரினவாதமும், அதன் கட்டியெழுப்பப்பட்ட இராணுவச் செலவினங்களும், கூடவே ராஜபக்ஷ தரப்பினரின் ஊழலும், அவர்களது ஆட்சித் திறமையின்மையுமே இலங்கையை இந்த நிலைமைக்குத் தள்ளியுள்ளன.**

ஊடகங்கள் தெரிந்தோ தெரியாமலோ முக்கியப்படுத்தவில்லை."

➤ **"இலங்கையில் தற்போதுள்ள நிலையைத் தமிழர்கள் எப்படிக் கையாள வேண்டும்?"**

"இலங்கையைப் போலவே 1998 இல் இந்தோனேசியாவிலும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. இலங்கையின் ஜனாதிபதி பதவி துறந்தது போன்று இந்தோனேசியாவிலும் நிகழ்ந்தது. இன்று இலங்கையின் புதிய ஜனாதிபதி பதவிக்கு வருவது போன்று, இந்தோனே சியாவிலும் புதிய ஜனாதிபதி வந்திருந்தார். அவர் இந்தோனேசியாவை மறுசீரமைப்பு செய்து, நாட்டின் ஓர் அங்கமாக இருந்த கிழக்கு தீமோரின் பொது வாக்கெடுப்புக்கு ஆதரவு தெரிவித்திருந்தார். அதையே நாமும் வலியுறுத்துகிறோம். ஆயினும் இலங்கையில் புரையோடிப் போயுள்ள இனநாயகம் இதற்கு சம்மதிக்காது.

சர்வதேசப் பார்வை இலங்கை நோக்கித் திரும்பியிருப்பதால் சர்வதேசத் தளத்தில் பொது வாக்கெடுப்புக்கான ஆதரவைத் திரட்ட இருக்கின்றோம். இனப்படுகொலையாளியும், அமெரிக்காவால் பயணத்தடைக்கு உள்ளாகியிருப்பவருமான சர்வேந்திர டி சில்வா, இப்போது இலங்கை அரசியலில் முக்கிய ஒருவராகக் காணப்படுகின்றார். இந்தச் சூழலில் உள்நாட்டு ரீதியாக பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான வாய்ப்போ வெளியோ இல்லை என்பதுதான் கள யதார்த்தம்."

➤ **"இந்தியாவின் செயற்பாடு, பங்களிப்பு எப்படி இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?"**

"தமிழக சட்டசபையில் அனைத்துக் கட்சிகளாலும் ஏகமனதாக, 'இலங்கை விவகாரத்தை சர்வதேச நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும். அரசியல் தீர்வுக்குப் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும்" எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் வரும் ஐ.நா. மனித உரிமைச் சபையில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதற்கான தீர்மானத்தை இந்தியா முன்மொழிய வேண்டும். இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிட்டவாறு, இலங்கைத்தீவில் வட-கிழக்குப் பகுதி தமிழர்களின் தாயகம் என்பதை உறுதிப்படுத்தும் செயற்பாடுகளை இந்தியா மேற்கொள்ள வேண்டும். அதற்கு முதல்படியாக அங்கிருந்து இராணுவ வெளியேற்றத்துக்கான அழுத்தத்தையும் செயற்பாட்டையும் இந்தியா முன்னெடுக்க வேண்டும்."

➤ **"ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை கோட்டாபய முன்னிறுத்துகின்றார். சஜித் பிரேமதாஸ, குமார திசநாயகே, சரத் பொன்சேகா எனப் பலரும் அப்பதவியைக் குறிவைக்கின்றார்கள். இலங்கையின் மீட்புக்கு யார் ஜனாதிபதியாக வரவேண்டும்?"**

"எம்மைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களுடைய நிலைமைக்குத் தனிமனிதர்கள் காரணிகள் அல்ல. இலங்கையில் புரையோடிப்போயுள்ள சிங்களப் பேரினவாதமே காரணம். அதனால் ஆளை மாற்றுதல், ஆட்சி மாறுதல் தீர்வைத் தரும் எனக் கருதவில்லை. ஐ.நா.முன்னாள் பொதுச்செயலர் பான் கீ மூன் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கையிலும், ஐ.நா. மனித உரிமைச்சபை ஆணையாளர் அறிக்கையிலும் இது அழுத்தமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது."

**ஜூனியர் விகடன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் நிலவிய அமைதியை கங்காணி கார்த்திகேயன் கலைத்தார்.

**கங்காணி:** ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ளார்.

இனி, நல்லாட்சியில கொண்டு வரப்படவிருந்த அரசியலமைப்புச் சீர்திருத்தம் மீளவும் கையில எடுக்கப் படுமோ?

**விதானையார்:** அதுதானே! கெடுகாலம் எல்லாத்தையும் எங்கட ஆட்கள் போட்டுடைச்சுப் போட்டினம்.

**மூப்பர்:** ஓ! எழுபது வருட கால அரசியல் அனுபவம் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியில நடந்த தன்னிச்சையான செயற்பாடு விபரீதத்தை ஏற்படுத்திப் போட்டுதென்று மாவையாரும் சொல்லியிருக்கிறார்.

**கங்காணி:** எல்லாம் நல்லாத்தான் போனது. சாணக்கியனுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையில ஏற்பட்ட கடும் பகை சுமந்திரனாற்ற சாணக்கியத்தை பாதிச்சுப் போட்டுது எண்டு தான் சொல்ல வேணும்.

**பண்டிதர்:** நீங்கள் அப்படிச் சொல்லுறியள். ஆனால் எழுத்து மூலமான உத்தரவாதத்தை டலஸ் அழகப்பெரும கொடுத்ததால கூட்டமைப்பு அவரை ஆதரிக்க வேண்டியதாய்ப் போயிற்றுது எண்டு சொல்லுறவையளும் இருக்கினம்.

**கங்காணி:** ஏன் பண்டிதர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு டலஸ் எழுத்து மூலமான உத்தரவாதத்தைக் கொடுத்ததால தான் அவரை ஆதரிப்பதாக இருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் டலஸை இடையில கைவிட்டதாகவும் கதை படுகுது.

**பண்டிதர்:** என்னவோ இதுகாறும் ரணில் விக்கிரமசிங்கவோட நின்ற கூட்டமைப்பு அவருக்குப் பதவி கிடைக்கிற நேரத்தில அவரைக் கைவிட்டதுதான் பெரும் பிழை எண்டு சொல்லுறவர்களும் அதேநேரம் எதுக்கும் கூட்டமைப்பு நடுநிலை வகித்திருக்கலாம் என்று கருதுகிறவர்களும் இருக்கத்தான் செய்யினம்.

**சிறாப்பர்:** அதுசரி, பேராசிரியர் பீரிஸுக்கு அமைச்சுப் பதவி கிடைக்காமல் போனமை அவருக்கு விழுந்த பெரும் அடி.

**வாத்தியார்:** சிறாப்பர் நீங்கள் அதனை அப்படிப் பார்க்கக் கூடாது. பேராசிரியர் பீரிஸை அரசியலுக்குக் கொண்டு வந்தவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரசிங்க.

ஆனால் பின்னாளில அவர் செய்ந்நன்றி மறந்து சந்திரிகாவை எதிர்த்தவர். பதவிக்கு ஆசைப்பட்டு மகிந்த ராஜபக்ஷவோட சேர்ந்தார்.

ஒரு கல்வியாளர் அப்படிச் செய்திருக்கக் கூடாது. அண்டைக்கு அவர் செய்ததுக்குத் தான் இண்டைக்கு அவர் பாடம் படிச்சிருக்கிறார்.

**சாத்திரியார்:** அதெண்டால் உண்மைதான். தென்பகுதியில ஏற்பட்ட அரசியல் குழப்பம் பலருக்கும் பாடம் புகட்டித்தான் இருக்குது.

**மூப்பர்:** என்ன சாத்திரியார் சொல்லுறியள்.

**சாத்திரியார்:** இனவாதம் பேசிக் கொண்டிருந்த பலருக்கும் சிங்கள மக்கள் செருப்படி கொடுத்திருக்கினம். இதில விமல் வீரவன்சவைப் பார்த்து சிங்களப் பொதுமகன் ஒருவர் ஏசின ஏச்சு.

நாங்கள் ஏதோ, விமல் வீரவன்ச துணிச்சல் மிக்க இனவாதி எண்டு நினைச்சம். ஆனால், அந்தப் பொதுமகன் நாயே! பேயே! எண்டு ஏசி அடிக்கப் போனதை வீடியோவில பார்த்தனான். வீரவன்ச மிரண்டடித்தபடி ஓடிப் போய் வாகனத்தில ஏறினதை.

**விதானையார்:** சாத்திரியார் அது ஒரு புறம் இருக்கட்டும்.

சோதிடத்தின்படி எங்கட நாட்டின்ர நிலை எப்படி இருக்கப் போகுது.

**சாத்திரியார்:** ரணில் விக்கிரமசிங்க அட்டமியில ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ளார். என்ன நடக்குமோ தெரியல்ல.

அதேநேரம் ரணிலின் நீண்ட கால ஜனாதிபதி ஆசை அவற்ற வீடு எரிக்கப்பட்ட பிறகு தான் சாத்தியமாயிருக்குது எனும் போது, அவற்ற வீடு வாஸ்து பிழையாக இருந்திருக்கும் போல.

என்ன இருந்தாலும் இப்ப ஊழ்வினை தான் வந்துறுத்துது.

**சிறாப்பர்:** அதெண்டால் உண்மைதான்.

இந்தாப் பாருங்கள் என் இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவை சிங்கப்பூரும் கெதியா வெளிக்கிட வேணும் எண்டு சொல்லிப் போட்டுது.

சுருங்கச் சொன்னால் எந்த நாட்டிலும் இடம் இல்லாமல் கோட்டாபய அலையிறார் எண்டால் அது அவர் செய்த கன்ம வினைப் பயன் தானே.

இவ்வாறு சிறாப்பர் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.



## இனவாதியான விமல் வீரவன்சவின்ர வீரத்தை அண்டைக்குப் பார்த்தோம்

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லாட்சி அரசாங்கத்தில் கூட்டமைப்பிற்கு தண்ணி காட்டியது யார்?






இலங்கையில் பிறந்த எம்.ஜீ.ஆர் எவ்வாறு தமிழக முதல்வர் ஆனார் வியாசரே?

**தருஷ் — வதிரி**

**புதிய ஜனாதிபதி பதவி ஏற்றுவிட்டார் இனி எல்லாம் சுபம் தானே?**

அட போங்கப்பா அது தான் அவர் பதவி யேற்று 24 மணி நேரம் கூட கடக்க வில்லை அதற்குள் கோட்டா கோ கம போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்த ப்பட்டிருக்கிறதே.

ஜனாதிபதியாக பதவியேற்றபின் உரை யாற்றிய ரணில் நான் ராஜபக்ஷர்களின் நண்பன் அல்ல நாட்டு மக்களின் நண் பனே என்று பேசியிருந்தார்.

அது சரி நாட்டு மக்களுக்குள் தானே ராஜ பக்ஷர்களும் அடங்குவர்.

**சுதன் — குப்பிளான்**

**நல்லாட்சி அரசாங்கத்தில் கூட்டமைப்பிற்கு தண்ணி காட்டியது யார்?**

ஒரு படத்தில் வடிவேலுவை சந்திக்கும் ஒருவர் கூறு வார். நான் உன்னை அடித்தேன் என்று.

அதற்கு வடிவேல் பல இடங்களில் அடிவாங்கியதை நினைவூட்டி அந்த குருப்பா என்று கேட்பார்.

அவனும் இல்லை என்று சொல்லிக் கொண்டே போவான்.

அதற்கு வடிவேலு சொல்லுவார். ஒரு இடத்தில் அடி வாங்கியிருந்தால் நினைவிருக்கும் ஓராயிரம் இடத்தில் வாங்கியிருக்கிறோமே எப்படி நினைவுக்கு வரும் என. இது போல கூட்டமைப் புக்கு தண்ணி காட்டியவர்கள் லிஸ்ட் பெரிசா நீண்டு செல்லுமப்பா.

## அன்பு வாசகர்களே உங்கள் கேள்விகளை 076 097 3126 SMS செய்யுங்கள்

**சஜன் — மீசாலை**

**உங்களுக்கு அரசியல் விருப்பம் இருக்கா வியாசரே?**

என்னை யாரும் கள்ளன் என்று கூறினால் என்னால் மனமுடையாமல் இருக்க முடி யாது.

என்னை யாரும் கோமாளி என்று கூறி னால் அதை என்னால் ஏற்க முடியாது.

என்னை யாரும் ஊழல்வாதியென்று கூறினால் அதை என் மனம் ஏற்காது.

இவை அனைத்தையும் விட என் குடும்ப த்தாரை யாரும் விமர்சனம் செய்தால் என்னால் பொறுமையாக இருக்க முடி யாது.

மேற்கூறிய அனைத்தையும் கேட்டு அமைதியாய் இருப்பவர்களே அரசிய லுக்கு வரலாம்.

அது என்னால் முடியாது. ஆகவே நான் அரசியலுக்கு வருவதற்கு வாய்ப்பே இல்லை.

**மதுவன் — மீசாலை**

**இலங்கையில் பிறந்த எம்.ஜீ.ஆர் எவ்வாறு தமிழக முதல்வர் ஆனார் வியாசரே?**

ஒருவேளை எம்.ஜி.ஆர் இலங்கையி லேயே இருந்திருந்தால் அவர் ஒரு சாதா ரண மனிதராக வாழ்ந்து மறைந்திருப் பார்.

ஒரு மனிதனை விதி எவ்வாறு மாற்றி யமைக்கிறது என்பதற்கு அவரே மிகச் சிறந்த உதாரணமாகிறார்.

சாதாரண ஒரு ஓலைக்குடிலில் பிறந்து தனது தாய் நாட்டுக்கு மீண்டும் புலம் பெய ர்ந்து நாடகங்களினூடே சினிமாவுக்குள் நுழைந்து சினிமாவில் நடித்தது போல ஏழைகளின் தோழனால் உருவெடுத்து தமிழ் நாட்டை ஆண்ட உன்னத தமிழ்த் தலைவனை காலம் ஒரு நாளும் மறவாது என்பதே உண்மையாகிறது.

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**இதழினி — புலோலி**

**மற்றவர் ஆசைக்காக எமது கனவுகள் சிதைக்கப்படுவது சரியானதா?**

எமக்கு மிக நெருக்கமானவர்களுக்கு ஏதும் நன்மை நடக்குமெனின் எமது கனவுகளை சிதைப்பதில் தவறேதும் இல்லை.

ஆனால் இப்போது காதல் என்ற விடயத்திற்காய் தமது வாழ்க்கையையே அழித்துக் கொண்டி ருக்கிறது எமது இளம் சமூகம்.

இளம் பருவ வயதில் வரும் காதல் என்பது விபத்தைப் போன்றது.

அதை கடந்து வரும் பக்குவத்தை நாம் கொண்டி ருக்கப் பழக வேண்டும்.

இல்லையேல் எமது எதிர்கால சந்ததி மந்தபுத்தி கொண்டவர்களாக வருவதற்கு வாய்ப்புக்கள் உண்டு.

**தேவசேனா — யாழ்ப்பாணம்**

**போராட்டக்காரர் மீது கை வைத்தது சரியானதா மாமா?**

அது அமைதிவழிப் போராட்டம். அது ஜனநாயக ரீதியான போராட்டம். எனவே ஒரு நாளும் அதற்கு இடையூறு செய்யமாட்டேன் எனக் கூறியவர் இப்பொழுது ஜனாதிபதியானதும் அவர்கள் மீது காட்டுமிராண்டித்தனமாய்த் தாக்குதல் நடத்துவது எதற்காக என்பது தான் புரியவில்லை.

அட அது தான் நிறைவேற்று ஜனாதிபதி பதவி யாச்சே... ஓ.. விசயம் அதுவோ...

**சுபா — புதுக்குடியிருப்பு**

**இன்றைய மாணவர்களினதும் ஆசி ரியர்களினதும் நிலைமை தொடர் பில் கூற முடியுமா வியாசரே?**

ஆசிரியர்கள் கல்வி புகட்டுபவர்கள். அவர்களின் மன அழுத்தத்திலும் கல்வி கற்கும் மாணவர்களின் மனநிலை மிக மோசமாகவே இருக்கிறது.

கொரோனாவின் தாக்கத்திற்குப் பின்னர் பாடசாலைச் செயற்பாடுகள் ஒழுங்காக நடைபெறவில்லை.

ஆனால் வகுப்பேற்றல்கள் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

எம் அடுத்த தலைமுறை சரியான ஆளு மையற்ற சமூகமாக மாறுவதற்கு இது வழிவகுக்கும் என்பதே எமது கருத்து.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**தர்மம் தோற்காது என்கிறார்கள் அப்போது ஏன் தமிழினம் இன்று வரை கஷ்டப்படுகிறது?**

எனது தாத்தா அடிக்கடி சொல்லும் வசனம் ஒன்றே இதற்கு பதில்.

"மாப்புளிப்பது அப்பத்துக்கு நல்லது" என்பது தான் அது.

மா நன்றாகப் புளித்து இருந்தால் தான் அப்பம் சூப்பராக இருக்கும்.

இப்போது ஆட்சியாளர்களின் அப்ப மா நன்றாகப் புளித்திருக்கிறது.

இனியென்ன அப்பம் நன்றாகத் தானே இருக்கும்.

அதில் இனிப்பு போட வேண்டுமா? காரம் போட வேண்டுமா? என்பதை தமிழர்களா கிய நாம் முடிவெடுப்போமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

| | | |
|---|---|---|
| படம் | : | ஊமைவிழிகள் |
| இயற்றியவர் | : | ஆபாவாணன் |
| இசை | : | மனோஜ் கயான் |
| பாடியவர்கள் | : | பி.வி.ஸ்ரீநிவாஸ், ஆபாவாணன் |



தோல்வி நிலையென நினைத்தால்
மனிதன் வாழ்வை நினைக்கலாமா?

வாழ்வை சுமையென நினைத்து
தாயின் கனவை மிதிக்கலாமா?
உரிமை இழந்தோம் உடைமையும்
இழந்தோம் உணர்வை இழக்கலமா?

உணர்வை கொடுத்து உயிராய்
வளர்த்த கனவை மறக்கலாமா

தோல்வி நிலையென நினைத்தால்
மனிதன் வாழ்வை நினைக்கலாமா?
வாழ்வை சுமையென நினைத்து
தாயின் கனவை மிதிக்கலாமா?

விடியலுக்கு இல்லை தூரம் விடியும்
மனதில் இன்னும் ஏன் பாரம்? உன்
நெஞ்சம் முழுவதும் வீரம் இருந்தும்
கண்ணில் இன்னும் ஏன் ஈரம்?

உரிமை இழந்தோம் உடைமையும்
இழந்தோம் உணர்வை இழக்கலமா?
உணர்வை கொடுத்து உயிராய்
வளர்த்த கனவை மறக்கலாமா

தோல்வி நிலையென நினைத்தால்
மனிதன் வாழ்வை நினைக்கலாமா?
வாழ்வை சுமையென நினைத்து
தாயின் கனவை மிதிக்கலாமா?

விடியலுக்கு இல்லை தூரம் விடியும்
மனதில் இன்னும் ஏன் பாரம்?
உன்நெஞ்சம் முழுவதும் வீரம் இருந்தும்
கண்ணில் இன்னும் ஏன் ஈரம்?

யுத்தங்கள் தோன்றட்டும் இரத்தங்கள்
சிந்தட்டும்! பாதை மாறலாமா?
இரத்தத்தின் வெப்பத்தில் அச்சங்கள்
வேகட்டும் கொள்கை சாகலாமா?

உரிமை இழந்தோம் உடைமையும்
இழந்தோம் உணர்வை இழக்கலமா?
உணர்வை கொடுத்து உயிராய்
வளர்த்த கனவை மறக்கலாமா

தோல்வி நிலையென நினைத்தால்
மனிதன் வாழ்வை நினைக்கலாமா?

விடியலுக்கு இல்லை தூரம் விடியும்
மனதில் இன்னும் ஏன் பாரம்?
உன்நெஞ்சம் முழுவதும் வீரம் இருந்தும்
கண்ணில் இன்னும் ஏன் ஈரம்?(2)

# அடக்குமுறைக்கான நேரம் இதுவல்ல

**“ அன்று பிரதமராகப்பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க கோட்டா கோ கம போராட்டக்காரர்களுக்கு எந்த இடையூறையும் மேற்கொள்ள வேண்டாம் என உத்தரவிட்டிருந்தார். ஆனால் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர்…? ”**


நாட்டில் என்ன நடக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை. நாம் ஒன்று நினைத்தால் தெய்வம் ஒன்று நினைக்கிறது என்ற பழமொழி இலங்கை வாழ் மக்களுக்கு நன்கு பொருந்துவதாய் தற்போதைய செயற்பாடுகள் அமைந்து இருக்கின்றன.

ராஜபக்ஷக்களின் ஆட்சி மீது சிங்கள மக்கள் கொண்ட வெறுப்பின் காரணமாக மா[illegible]பெரும் எழுச்சி ஏற்பட அ[illegible]ந எழுச்சியின் முன் ரா[illegible] பக்ஷக்களின் பலம் தே[illegible]ற்றுப் போக அவர்க ளி[illegible] முடியாட்சிக்கு முடிவு கி[illegible]டியது. இருப்பினும் முக்கியமானவை என கர்தினால் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் அரசின் மிக முக்கிய பதவிக்கு தெரிவு செய்யப்படுவது பொருத்தமற்ற செயல் என மகா சங்கங்கள் ஏலவே அறிவித்திருந்தமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்க விடயமாகிறது. இது இவ்வாறிருக்கையில் புதிய ஜனாதிபதியாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

ஜனாதிபதித் தெரிவில் மகிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் இருந்து விலகியதைத் தொடர்ந்து புதிய பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற அடுத்த கணமே கோட்டா கோ கம போராட்டக்காரர்களுக்கு எந்த இடையூறையும் மேற்கொள்ள வேண்டாம் என அறிக்கை விட்டிருந்ததுடன் அவர்களின் நலனில் தான் அக்கறை கொள்வதாக வும் தெரிவித்திருந்தார்.

ஆனால் இன்று அதிகாரமளிக்கப்பட்ட ஜனாதிபதியாக பதவியேற்று 24 மணி நேரத்திற்குள் போராட்டக்காரர்கள் மீது கடும்



புதி[illegible] ஜனாதிபதியை தெரிவு செ[illegible]வதில் மக்கள் விருப் பு[illegible] எதிர்மறையான முடிவே கி[illegible]த்திருக்கின்றது என் ப[illegible] அனைவரும் ஏற்று த்த[illegible] ஆக வேண்டும்.

[illegible]னாதிபதி தெரிவுக் கா[illegible]பாராளுமன்றில் வாக் செ[illegible]ப்பு நடைபெற இரு ந்த[illegible]வேளையில் பேராயர் கர்[illegible]ால் மல்கம் ரஞ்சித் ஆ[illegible] டகை பாராளுமன்ற உறு[illegible]பினர்களுக்கு கடிதம் ஒ[illegible]ற அனுப்பியிருந்தார். [illegible]தில் புதிய ஜனாதி பதி[illegible] தெரிவில் மக்களால் வா[illegible]ளிக்கப்பட்டு பாரா ளும[illegible]ற்றம் சென்ற உறுப் பின[illegible]கள் மக்களின் விருப் பத்[illegible]ற்கு எதிரான தீர்மா னத்[illegible]த எடுப்பார்களோ என[illegible] அச்சம் மக்கள் மத் தி[illegible] இருக்கிறது. எனவே கு[illegible]ய காலத்தில் பெற்ற அ[illegible]யல் அதிகாரத்தை [illegible]

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இராஜதந்திரம் மீண்டும் தோற்றுப் போனதை உணர முடிகிறது என்பதற்கப்பால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி வேட்பாளர் டலஸிற்கான ஆதரவை தெரிவித்தமையே ரணிலை ஜனாதிபதியாக்கியது என்ற ஐயங்கள் எழாமலில்லை.

எது எவ்வாறோ கூட்டமைப்பின் இராஜதந்திர பஞ்சம் தமிழ் மக்களுக்கு நன்கு புரிந்திருப்பது வரலாறே.

நிலை இதுவாக இருக்கையில், ரணில் ஜனாதிபதியாய் பதவியேற்று 24 மணி நேரத்தில் கோட்டா கோ கம போராட்டக்காரர்கள் மீது மிகக் கொடூரமான தாக்குதலை படையினர் மேற்கொண்டிருந்தனர் எனின் அதன் அர்த்தத்தை உணராதவர்கள் எவருமாக இருக்க மாட் டார்கள்.

தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது எனின் இந்த இரு வேறு சம்பவங்களையும் பிரித்தறியும் சக்தியை மக்கள் கொண்டிருக்க வேண்டும்.

போராட்டக்காரர்கள் மீது கொடும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து அத் தாக்குதலுக்கு கடும் கண்டனங்கள் எழுந்த வண்ணமே உள்ளன.

அதிலும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜனாதிபதி ரணிலை நேரில் சந்தித்து மக்களை ஒடுக்கும் நேரம் இதுவல்ல என தனது கண்டனத்தை தெரிவித்திருக்கிறார்.

தெரியாத தேவதையிலும் தெரிந்த பிசாசு மேலானது என்ற தமிழ் பழமொழியை இங்கு நினைவில் கொள்வோமாக.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

நீதனின் தனிமையான நினைவுகளும் எவ்வாறு புலனாய்வுத் துறையினரை எதிர்கொள்வது என்ற திட்டங்களும் அவனது அறையைவிட, ஜிம்மில் தான் அதிகம் இரைமீட்டப் பட்டன.

இன்றோ - நாளையோ சமயோசிதமான பதில்களைச் சொல்லி, புலனாய்வுத்துறையினரை ஏமாற்றி, முகாமைவிட்டு வெளியில் போய் விட்டாலும், இந்த நாட்டில் நிம்மதியாக வசிப்பதென்பது உத்தரவாதமானது அல்ல என்பது நீதனுக்குள் மீண்டும் மீண்டும் அலாரமாய் ஒலித்தது. நாளையே பெரும் பொய் ஒன்றைச் சொல்லி, வெளியேறி அனீஸாவும் பிள்ளைகளும் இங்கு வந்து குடும்பமாய் வாழ்ந்து கொண்டிருக்கும் போது, மீண்டும் வேறு ஆதாரங்களும் நானும் கூடவே இருக்கலாம். இதுவொன்றும் குற்றவிசாரணை அல்ல.

அகதிகளின் நன்நடத்தை குறித்த நாட்டின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான சந்திப்பு, அவ்வளவே. நீங்கள் புலிகள் அமைப்பிலிருந்தவர் என்றும் அங்கு வன்முறைகளில் ஈடுபட்டவர் என்றும் ஒப்புக்கொண்டாலும் கூட, உங்களுக்கு இங்கு தண்டனையெல்லாம் வழங்கப்போவதில்லை. சமூகத்தோடு உங்களைப் போன்றவர்களை இணைப்பதற்கான சிறப்பு ஏற்பாடுகள் பற்றித்தான் யோசிப்பார்கள்" என்று சொன்னார்.

தனியாக இருக்கும் நேரமெல்லாம், நீத னின் புலனாய்வு நரம்புகள் இமைத்தபடியே இருக்கும். தன் பொறுப்புக்குந்தான்.

"அண்ணே, அடுத்த சந்திப்பில எல்லாத்தையும் சொல்லீடலாம் எண்டு பாக்கிறன்"

அவன் முழுவதுமாய் முடிவெடுத்துவிட்டவனாக, பதற்றமில்லாமல் தேநீரை உறிஞ்சினான். பதிலுக்கு நானும் பதற்றமில்லாமல், அவனது முடிவைக் கேட்க வேண்டிய இடத்திலிருக்கிறேன் என்பதைக் காட்டுவதற்கு, நானும் தேநீரைப் பருகினேன். பிளாஸ்ரிக் குவளையின் விளிம்பு என்னவோ தெரியவில்லை, சாதுவாகக் குளிர்ந்தது.

"எத்தனை நாளுக்கு அண்ண, உள்ளயிருந்து பொய் சொல்லி சொல்லி, குடும்பத்தைப் பார்க்காமல் இருக்கிறது. உண்மையச் சொல்லி, எப்படியாவது, அடுத்த கட்டத்துக்குப் போகப்போறன்.

உண்மையான பெயர் தெரியாத காரணத்தினால், என்னாலும் கணனியுள்ள பொதுக்கோப்பில் தேடுவதற்கோ, அவன் அவுஸ்திரேலியாவில் வேறு எங்காவது ஒரு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருக்கிறானா என்பதைக் கண்டறிவதற்கோ முடியவில்லை.

நீதன் சொன்னது எல்லாவற்றுக்கும் "ம்" சொன்னேன். அனீஸாவுடனும் பிள்ளைகளுடனும் இனிமேலும் தன்னால் பேசாமல் இருக்கமுடியாது என்றான். தொலைபேசியில் அழைப்பெடுப்பதற்கு குடிவரவு அமைச்சிடம் அனுமதி பெற்றுத்தரும்படி கேட்டான்.

நீண்டகாலத் தடுப்பில் உள்ளவர்களுக்கு உடனடியாக சர்வதேசத் தொலைபேசித் தொடர்புகள் ஏற்படுவதற்கு அனுமதி கொடுக்கப்படவில்லை. சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கமும் சர்வதேச மன்னிப்புச் சபையும் முகாமுக்கு வந்து அகதிகளின் கடிதங்களை வாங்கி, அவர்களது உறவினர்களிடம் சேர்ப்பித்துக் கொண்டிருந்தார்கள்.

"இனிமேலும் இந்த முகாமில் எவ்வளவு காலம் வசிக்கவேண்டியிருக்குமோ தெரியாது அண்ணே. எதுக்கும் குடும்பத்தோட ஒருக்கா கதைச்சால், மனசுக்குத் தெம்பா இருக்கும்"

**கானகனைப் பற்றி அவன் அதிகம் யோசிக்கிறான் என்பது புரிந்தது. ஆனால், தனக்கு முன்னால் விழுந்துள்ள அந்தப் பொறியை, தன்னிடமுள்ள கடைசி ஆயுதத்தினால் அச்சமின்றித் தாண்டுவதற்கு நீதன் முடிவெடுத்து விட்டான் என்பது தெரிந்தது.**

## வலி சொல்லும் தொடர்... 40



ளோடு வந்து, தன்னைத் தூக்கிக் கொண்டு போய்விட்டார்கள் என்றால் என்ன செய்வது?

மூன்றாம் உலக நாடுகள் எப்போதும் பணத்துக்கும் ஏமாற்று வித்தைகளுக்கும் இலகுவாக செல்லுபடியாபவை. ஆனால், இங்கு அப்படி எந்தச் செத்த மிளகாயும் இலகுவில் பொரியாது.

கானகன் தன்னைப் பற்றி என்னவெல்லாம் சொல்லிவைத்திருக்கிறான் என்பதைச் சொல்வதற்கு முன்னர், தானாகவே எல்லாவற்றையும் புலனாய்வுத்துறையினரிடம் ஒப்புவித்து விடலாமா என்று யோசித்தான். ஒரு வேளை, அப்படிக் காலில் விழுந்து விட்டால், உனக்குத் தெரிந்த ஏனையவர்களைப் பற்றிய தகவல்களையும் தா என்று, விட்ட இடத்திலிருந்து விசாரணைகளைத் தொடங்கிவிட்டார்கள் என்றால் என்ன செய்வது?

நீதனுக்கு ஒன்றுமாத்திரம் நிம்மதியாக இருந்தது. புலனாய்வுப்பிரிவினர் நடத்தும் எந்தச் சந்திப்பும் எந்த விசாரணையும் வன்முறைகள் நிறைந்தது இல்லை.

பிளாஸ்ரிக் பைப்பிற்குள் மண்ணை நிறைத்துவைத்து, தலைகீழாய் தொங்கவிட்டு அடித்து அடித்து கேள்வி கேட்கப்போவதில்லை. நகங்களைப் பிடுங்கப்போவதில்லை.

நீதிமன்றத்திற்கே கொண்டுபோகாமல், விசாரணைகள் நடத்தி சாவடிக்கப் போவதில்லை. நீதனின் சட்டத்தரணி கரோலின் முதல்நாள் பேசும்போதே சொல்லியிருந்தார். "சகல சந்திப்புக்களிகளை நினைத்துப் பொருமியபடியிருக்கும்.

ஒரு சனிக்கிழமையன்று எனக்கு இரவு வேலை. அல்பா கம்பவுண்டிற்கு வெளியே வழக்கம்போல என்னுடனிருந்து பேசவேண்டும் என்றான் நீதன்.

எனக்கு இரவு வேலையுள்ள நாட்களில் நடுநிசி வரைக்கும் கணனியில் பதிவேற்ற வேண்டிய அறிக்கைகளிருக்கும். அன்றைய நாளுக்குரிய சம்பவ அறிக்கைகளைச் சேகரித்து, குடிவரவு அமைச்சுக்கு அனுப்ப வேண்டியிருக்கும். மூன்று நேரமும் சாப்பிடாதவர்கள் யாராவது உள்ளார்களா என்று முழுமையாகச் சோதனை செய்ய வேண்டும். முகாமிலுள்ள அகதிகள் அனைவரும் மூன்று வேளைகள் எண்ணப்பட்டு, யாரும் அகுனா போல வேலி பாய்ந்து ஓடிவிடவில்லை என்று உறுதிப்படுத்திய அறிக்கையை குடிவரவு அமைச்சுக்கு அனுப்ப வேண்டும். எல்லாவற்றையும் துரிதமாக முடித்துக்கொண்டால், நீதன் அல்லது வேறு யாராவது தமிழ் அகதிகளுடன் அல்பா கம்பவுண்டிற்குள் அல்லது வெளியிலிருந்து பேசுவது வழக்கம்.

பின்னிரவு நிலா, பக்கத்து வளவிலிருந்து எழுந்து வளர்ந்து முகாமுக்குள்ளேயும் படர்ந்திருந்த யூக்கலிப்டஸ் மரத்தில் விழுந்து, வரி வரியாக நடுமைதானத்தில் கோலம் போட்டிருந்தது. மெல்பேர்ன் கோடை, இரவுக்கு மாத்திரம் வெக்கைக்கு விடுமுறை வழங்கியிருந்தது.

சூடான தேனீரோடு மர இருக்கைக்கு வந்த நீதன். [illegible] குவளையை [illegible] எனக்கு குடும்பத்தை பார்க்கவேணும் அண்ண. இரவில பிள்ளையளிண்ட குரல் கேட்குது"

முகம் தெரியாத அரையிருளிலும் அவன் குரல் உடைந்தது கேட்டது.

இது அவனது வாழ்க்கை. என்னதான் ஒரே மொழி பேசுபவன் என்றாலும், எதையும் அவனுக்குச் சொல்லிக் கொடுக்கும் உரிமையில் நானில்லை. அது அவனுக்கும் தெரியும். ஆனால், தான் மனம் விட்டுப்பேசுவதற்கு நம்பிக்கை உடையவனாக அந்த இரவில், அவனருகில் நான் இருந்துகொண்டிருக்கிறேன் என்பதில் எனக்கு திருப்தியிருந்தது. அதனைப் பயன்படுத்துவதற்கு அவனுக்கான தேவையிருந்தது.

கானகனைப் பற்றி அவன் அதிகம் யோசிக்கிறான் என்பது புரிந்தது. ஆனால், தனக்கு முன்னால் விழுந்துள்ள அந்தப் பொறியை, தன்னிடமுள்ள கடைசி ஆயுதத்தினால் அச்சமின்றித் தாண்டுவதற்கு நீதன் முடிவெடுத்து விட்டான் என்பது தெரிந்தது. கானகனின் குடிவரவு அமைச்சுக்கான கோரிக்கைப்படிவத்தை எடுத்துவந்து, அல்பா கம்பவுண்ட் வெளிவிறாந்தை வெளிச்சத்தில் வைத்து நிரப்பினேன். நீதன் கையெழுத்திட்டான். அழைப்பு எடுக்க வேண்டிய இந்தோனேசிய தொலைபேசி இலக்கம் எழுதியது சரியா என்று சரி பார்த்துவிட்டுத் தந்தான். மறுநாள், குடிவரவு அமைச்சு அதிகாரிகளுடனான சந்திப்பில், சேர்த்துவிடுவதாகக் கூறினேன்.

சகல உணர்வுகளும் நிறைந்த புதிய மனிதனாக நீதன் மாறிவருவது அவனது முகத்தில் தெரிந்தது. எதையும் எதிர்கொள்வதற்குத் தயாராகிவிட்டவன் போல தன்னைத் திடப்படுத்திக்கொண்டான். தான் சொல்லப்போகும் பதில்கள் தனக்கு எம்மாதிரியான உதிர்காலத்தைத் தந்தாலும், அதனை சவாலாக வாங்கிக்கொள்வதற்கு உறுதியாய் தெரிந்தான்.

அந்த வைராக்கியம், அடுத்தநாள் ம்மாலைவரைக்கும் மாத்திரமே குழப்பமின்றி நீடிக்கும் என்று அவன் அப்போது எதிர்பார்க்கவில்லை. ஏன், நானும்தான் எதிர்பார்க்கவில்லை.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய வரலாறு எழுதுவோம்

முற்ற வெளி திடலிலே
மும்முரமாய் மாற்றம் கோரி
தொடர்ந்த போராட்டம்
முளையும், கிளையுமாக
கிளர்ந்தெழுந்தனர் சனசமுத்திரமாக
ஜாதிமத பேதமில்லா
ஒற்றுமையின் கோஷம் வானைக்கிழித்தது
வாதிட யாருமில்லை வாயும் வயிறும்
பட்டினிச்சாவை நோக்கிட
வீதியிலே நீண்ட வரிசை - எரிபொருளுக்காக
வருமானமில்லை, வேலையுமில்லை
சர்வதேசமே
எம் நிலைக்கு தீர்வில்லையா?
பொருளாதரப்பாதிப்பு,
பொருட்களுக்கு ஏறுது விலை
இதனால் பொங்கி எழுந்தனர் மக்கள்
பொடிப்பொடியாகியது
தடை உடைந்தது முடக்க வழிப்பாதை
தலைதெறிக்க ஓடிய தலைமகன்
தலைமறைவாகினான்
இலங்கையில் நாம்
எண்ணியோரைத் தேர்ந்தெடுப்போம்
புதிய வரலாறு எழுதுவோம்
இது ஜனநாயக நாடென முழங்குவோம்

அக்கராயன் கவியரசன்,
கே.ஜே.ரெக்ஸ்.

## உறைந்த உதிரங்கள்

உலகம் உரைத்த மெய்மொழி எல்லாம்
கடலின் அலையில் கரைந்திடும் போது

காலம் கடந்த காட்சிகள் எல்லாம்
கண்முன் அனலாய் எரிந்திட இன்று

நாளும் கண்ட பலிகள் எல்லாம்
பலித்திடும் சாபக் குரலாய் என்றும்

பலரும் கண்ட புதிராய் எந்தன்
நாட்டின் நடப்பு மாறிப் போக

கரங்கள் உயர்த்திய பலரும் விரைந்து
உயிர்கள் காத்திட ஓடும் காட்சி

கொடுமை இழைத்த பாவிகள் எல்லாம்
ஓடும் ஓலக்கதையாய் தெரிய

தமிழன் காணும் துன்பம் எல்லாம்
உறைந்த உதிரக் கவியாய் கூற



ந.விதுஷன்,
யா/ஹாட்லிக் கல்லூரி.

## ஏனிந்த சாதிவெறி

பூமியில் உயிரினம்
தோற்றம் பெற்றது
அவ்வினம் உருவ மாற்றத்தின்
அடிப்படையில்
விலங்கினம், பறவையினம், மனித இனம்
என வகைப்படுத்தப்பட்டது
அவ்வினங்கள் உடலியல் மாற்றத்தின்
அடிப்படையில் ஆண், பெண்
என வகைப்படுத்தப்பட்டன
அவற்றில் மனித இனம்
பேசும் மொழிக்கு அமைய
மேலும் வகைப்படுத்தப்பட்டது
ஆனால் எதனை அடிப்படையாக
வைத்து மனித மனங்களில்
சாதி வெறியை உண்டாக்கி-அதன்
அடிப்படையில் மனிதர்களை
சிறுமைப்படுத்தி வதைக்கிறார்களென்பதை
இன்றுவரை அறிய முடியவில்லை
எதை அடிப்படையாக வைத்து உருவானது
இந்த சாதி வெறி?
"ஒரு தாய் மக்கள் நாமாவோம்" என்ற
கூற்று வெறும் புத்தகப்படிப்பிற்குதானா?

இ.இளமதி,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

## மௌனத்தின் தேடல் -567



## நாயின் நிலையும்

எறும்பைப் போலும் உருவமுள்ள
எதையும் காணில் எடுத்துச்
சுவைக்கத் துன்பம் தானே
எஞ்சும் வேறு சுகமும் காண
முடியுமாமோ பசி பட்டினி
பொருட்கள் விலை எரிபொருள்
என்ணெய்க்கான நிலையும் இதோ
எங்கள் நாட்டு நாயின் நிலையும்

வைகைவாசன்,
நல்லூர்.

## நன்றி உணர்வு

மனிதன் தந்த எலும்புத் துண்டை
வாயால் கவ்விச் செல்லும்
ஐந்தறிவு மிருகமே
ஒரு நாள் நாம்
உனக்கு இப்படி உணவளித்தால்
என்றும் நமக்கும் நன்றியோடு விசுவாசமாய்
இருக்கும் உன்னைப் போல உலகில்
ஆறறிவு மனிதர்கள்
இல்லையே!

சுப்பிரமணியம் ஜெயருபன்,
பருத்தித்துறை.

## எலும்புத்துண்டுடன்

எலும்புத் துண்டை
வாஞ்சையுடன் கௌவி
விட்ட உன்றன் நன்றி உணர்வு
ஆறறிவு கொண்ட மனித ஜாதியோ
எலும்பு துண்டை கண்டவுடன்
கட்சி என்ன? இலட்சியம் என்ன?
கொள்கை என்ன?
நிற்கவா போகிறாய்
எலும்புத் துண்டிற்காய்...

தமிழ்ப்பித்தன்,
பண்டாரிக்குளம்.

## புகட்டி விடு

எலும்புத் துண்டை
கௌவிய ஐந்தறிவு
ராசாவே கற்றிட
வாஞ்சையுடன் இன்றே
விரைகின்றோம் உன்றனை
காண தயங்காதே சற்றும்
நன்றி மறப்பது நன்றன்று
என்பதை இடித்தே மனித
குல ஜாதிகளுக்கு புகட்டி விடு


தமிழ்பிரியன்.

## விதைத்த வினை விளைந்தன

நான்கு பக்கமும் மதிலால் சூழப்பட்ட
மாடமாளிகையில் வீற்றிருக்கும் நாயே!
உன் வாயிலோ எச்சில் இறைச்சித்துண்டு
நீயோ வீட்டிற்கு நாய் என்றாலும்
நாட்டிலே நீ ஒரு ஐந்தறிவு ஜீவன் தான்
நாயும் நரியும் ஒரே இனம் தான்
வீட்டிற்குள் நாயாகவும்
காட்டிற்குள் நரியாகவும் வாழ்ந்தாலும்
கடைசி நேரம் நீ பல்லுப் புடுங்கின பாம்பு தான்

ஆ.பாலமதுஜா,
திருநாவலூர், புலோலி மேற்கு, பருத்தித்துறை.

## மௌனத்தின் தேடல் -568




அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி - சங்குநாதம்
இல.03,2 ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## தன்னல வீரர்

எலும்புத் துண்டிற்கு
அவாவுறும் நாய்கள் போல
அற்ப சலுகைகள் தேடும்
மக்கள் பிரிதிநிதிகளெனும்
சுயநலவாதிகளால்
வரண்டு போன தேசத்தில்
ஏழையரிலும் ஏழையராய் ஆகி
வறுமையில் உழவும்
மாந்தர் நிலை கண்டும்
சுயநலமே கதியென நடந்திடுவர்
வாய்ச் சொல் வீரர்

சி.இ.அன்புதுரை,
சம்மட்டியோலை,
மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தின் அதிசயங்கள் - பகுதி 2



1797 இல் அப்போதைய செங்கல் பட்டு ஆட்சியராக இருந்த லியோன்ஸ் பிலேஸ் என்பவரிடம் அந்தக் கிராமத்து மக்கள் இங்கு பறவைகள் வந்து தங்குவதையொட்டி இதனை சரணாலயமாக அறிவிக்கக் கோரினர்.

அதனை ஏற்று 1798 ஆம் ஆண்டு இது பறவைகள் சரணாலயமாக அறிவிக்கப்பட்டது. அன்று முதல் இந்தக் கிராமத்து மக்கள் பறவைகளின் நலனுக்காக பலவிதங்களில் தங்களை அர்ப்பணிக்கின்றனர்.

இங்கு கனடா, அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், பர்மா, சைபீரியா ஆகிய நாடுகளில் இருந்து கூலைக்கடா, நீர்க் கோழி, நீலச்சிறகி, கிளுவை, நீர்க் காகங்கள், பாம்புத்தாரா, குருட்டுக் கொக்கு, பூ நாரைகள், இராக்கொக்கு போன்ற பல்வேறு பறவைகள் ஆண்டு தோறும் செல்கின்றன.

இவை மட்டுமல்லாது அரிய மற்றும் வித்தியாசமான பறவை இனாங்களான காகனெய், அவுஸ்திரேலியாவின் கிரே பெலிகன், இலங்கையின் பாம்பு பறவை, கிரேஹெறான், கிளாலி ஐபிஸ், திறந்த அலகு நாரை, சைபீரியக் கொக்கு மற்றும் ஸ்பாட்பில்ட்டக் முதலியவை அடங்கும்.

இந்த சரணாலயத்தின் பல சிறிய ஏரிகள் சேர்ந்து சுமார் 74 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளன. பல அரியவகை ஐரோப்பிய பறவை இனங்கள் நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் இந்த சரணாலயத்திற்கு வருகை தருகின்றன. ஒரு காலத்தில் வேடர்கள் அதிகம் தங்கிச் செல்வதன் காரணமாக வேடந்தாங்கல் என்று பெயரிடப்பட்ட இந்த ஊரில் வேடர்களை அனுமதிக்கவே முடியாது என்று கிராமத்து மக்கள் உறுதியோடு இருந்ததாகச் சொல்லப்படுவது வரலாற்றில் விசித்திரமான விரும்பத்தக்க முரண் என்பதாலும் பிற உயிர்களையும் தம் உயிர்போல் பேணும் அந்த மக்களை வணங்குதல் தகும். பறவைத் தாங்கல் என்றோ பல்லுயிர்த் தாங்கல் என்றோ இந்த ஊரின் பெயர் பின்னொரு காலத்தில் அழைக்கப்பட்டால் அது பொருத்தமானதாகவே இருக்கும் என்றே தோன்றுகிறது.

தமிழகத்தின் தொன்மை, பண்பாடு, கலைத்திறன், இயற்கை எழில், தொழில் நுட்ப அறிவு ஆகியவற்றை புலப்படுத்தும் இடங்கள் இன்னமும் உண்டு.

பலாச்சுளையின் எப்பக்கமும் தித்திக்கும் என்றாலும் என் விரல் தீண்டி கண் சுவைத்து உள்ளிறங்கிய சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிடுகிறேன்.

# உலகின் தெழில் திறன் அதிசயங்கள்-பகுதி 1

படைக்கப்பட்ட உயிரினங்கள் சிந்திக்கும் பேராற்றலும் அதனை நுட்பமாய் பயன்படுத்தும் திறனும் உடையது. மனித இனம் தான் சிலந்தியும் கூடு கட்டுகிறது. கறையானும் புற்றினை எழுப்புகிறது. வண்டுகளும் மணலைக் குடைகின்றன. இருப்பினும் அவையாவும் ஒரே மாதிரியான, பழக்கத்தின் அடிப்படையிலும் ஒரே மாதிரியான தேவைகளுக்காகவும் தங்கள் உழைப்பைத் தருகின்றன. மனிதனின் சிந்தனை அறிவியல் ரீதியாவும் அதே சமயம் கலை நேர்த்தியோடும் காலத்திற்கு ஏற்பவும் வடிவமைக்கப்படுகின்றன.

சக்கரம்தான் மனிதனின் முதல் அறிவியல் கண்டுபிடிப்பு என்பார்கள். பௌதீகமான வடிவமுடையது என்பதால் அதனைச் சொல்லியிருக்கலாம். நெருப்பு கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்தே மனிதனின் தேடலும் கண்டடைதலும் புதிய புதிய வாசல்களை திறந்தபடிதான் இருக்கின்றன. உணவுக்கான தேடல் என்பது போய் தங்களை விருத்தி செய்யவும் தங்களின் வசதிகளை சௌகரியங்களை மேம்படுத்தவும் மனிதனின் பல்வேறு முயற்சிகள் தொழிற் புரட்சிக்கு வித்திட்டன.

அப்படியான தொழில் சார்ந்த மனிதனின் திறன் வெளிப்பாடுகளை உலகம் இன்றளவும் கண்டு அதிசயித்து பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. மனிதனின் மேம்பட்ட தொழிற்றிறன் உன்னதங்களை சிலர் பட்டியல் இட்டு இருக்கின்றனர். இந்தப் பட்டியலை அதிகாரபூர்வமான ஒன்றாகக் கருத முடியாது என்றாலும் மனிதனின் வியத்தகு சாதனைகள் சிலவற்றைப் பற்றி அறிந்து கொள்ளும் வாய்ப்பாக எடுத்துக் கொள்ளலாம்.

(தொடரும்)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2670

### கஜன்

நீ செய்யும் தவறுக்கு
எதிர்பாராத நேரத்தில்
தண்டனையும்
நீ செய்யும் நன்மைக்கு
தக்க சமயத்தில் உதவியும்
நிச்சயம் கிடைக்கும்.

### வக்சன்

வாழ்க்கை என்பது
ஒரு சந்தர்ப்பம் -நழுவ விடாதீர்கள்
ஒரு கடமை -நிறைவேற்றுங்கள்
ஒரு -இலட்சியம் சாதியுங்கள்
ஒரு சோகம் -தாங்கிக் கொள்ளுங்கள்
ஒரு போராட்டம் -வென்று காட்டுங்கள்
ஒரு பயணம் -நடத்தி முடியுங்கள்

### தாட்சா



ஆணுக்கு அன்பை
வெளிக்காட்ட
தெரியவில்லை
அப்படி காட்டாத
அன்பை பெண்ணிற்கு
புரிந்து கொள்ள
தெரியவில்லை
இதுவே பல பிரிவிற்கு
காரணம்.

### நித்தியா

உண்மையில் நேசிப்பவரால் ஒருநாள் கூட பேசாமல் இருக்க முடியாது. நேசிப்பவர் போல் நடிப்பவர் எத்தனை நாள் ஆனாலும் பேசாமல் இருப்பர்...

### வருணி

உங்கள் வாழ்வானது உங்கள் எண்ணப்படியே நிகழும்! ஆதலால், எண்ணத்தை எப்போதும் சுத்தமாக வைத்திருங்கள்



### கிசோக்

இவ்வுலகில் மனதளவில் கூட துரோகம் நினைக்காத இரு ஜீவன்கள்... பத்து மாதம் சுமந்து பெற்ற அம்மா, பெற்ற மாதத்திலிருந்து சுமந்த அப்பா...!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

300

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## ஆட்டாமா உணவுகள் உடல் நிறையை கட்டுப்படுத்த உதவுமா?

ஆட்டாமா என்பது கோதுமை அரிசியை தீட்டாது தவிடு சேர்த்து திரிப்பதன் மூலம் பெறப்படுகிறது. பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வரும் இந்த ஆட்டா மாவை பலரும் ஆர்வத்துடன் வாங்கி பயன்படுத்தி வருகிறார்கள்.

ஆட்டாமா உணவு வகைகளை உண்டால் உடல் மெலியும் என்று நம்பி தமது அன்றாட உணவில் அதிகளவு ஆட்டாமாவைச் சேர்த்து ரொட்டியாகவும் பிட்டு ஆகவும் உண்டு உடல் பருத்துப் போனவர்கள் பலர்.

கோதுமை அரிசியை தீட்டிய பின் திரிப்பதன் மூலம் பெறப்படும் கோதுமைமாவுடன் ஒப்பிடும்




பொழுது ஆட்டாமாவிலே தவிட்டுத்தன்மையும் நார்த்தன்மையும் அதிகமாக காணப்படுகிறது.

இதனால் ஆட்டாமா உடலினுள் அகத்துறிஞ்சப்படும் வேகம் ஒப்பீட்டளவிலே சற்றுக் குறைவாகும் ஆனால் குறைந்த வேகத்திலே ஆட்டாமாவில் இருக்கும் மாப்பொருள் அனைத்தும் அகத்துறிஞ்சப்பட்டு உடலினுள் செல்லும். எனவே உடல் நிறை குறைப்பிற்கு ஆட்டாமா உணவு வகைகள் உகந்தவை அல்ல.

சாதாரண நிறையுடைய நீரிழிவு நிலை உள்ளவர்களுக்கு கோதுமைமாவுடன் ஒப்பிடும் பொழுது ஆட்டாமா சிறந்தது எனக் கொள்ளலாம்.

ஆனால் எமது பிரதேசங்களில் விளையும் உழுந்து, பயறு, கௌப்பி, பருப்பு வகைகள் போன்றவை ஆட்டாமாவுடன் ஒப்பிடும் பொழுது எமது உள்ளூர் உற்பத்திகள் பல வழிகளிலும் சிறந்தவை ஆகும்.

தீட்டாத தவிடு சேர்க்கப்பட்ட ஊர் அரிசிமா வகைகளும் ஆட்டா மாவுக்கு ஒப்பானவை. எனவே நாம் உள்ளூரில் விளையும் உணவு வகைகளுக்கு முன்னுரிமை கொடுப்பது பயனுடையதாக அமையும்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

## நஞ்சு அன்று கொல்லும், சோடா நின்று கொல்லும்

"அரசன் அன்று கொல்வான். தெய்வம் நின்று கொல்லும்" என்பதன் உண்மையை நாம் எம் முன்னோர்களிடமிருந்தும் அனுபவ ரீதியாகவும் தெரிந்து வைத்திருக்கிறோம். ஆனால், நஞ்சு அன்று கொல்லும். சோடா நின்று கொல்லும் என்ற விடயம் எம்மில் பலருக்குத் தெரியாது. சோடா சக்தி தரும் ஓர் ஆரோக்கிய பானம் என்று நம்பி ஏமாந்து கொண்டிருக்கின்றோம்.

பெருகி வரும் சோடா குடிக்கும் பழக்கம் சுகாதாரத்துறைக்குப் பெரும் சவாலாக உருவெடுத்திருக்கிறது. இதன் காரணமாகப் பல சுகதேகிகள் இளம் வயதிலேயே பல்வேறு நோய்த் தாக்கங்களுக்கு ஆளாகிவருகிறார்கள்.

சோடா குடிப்பதால் முக்கியமாகப் பற்சிதைவும் பல் சம்பந்தமான நோய்களும் எலும்பு பலவீனமடைதலும் மூட்டு சம்பந்தமான நோய்களும் உடல் நிறை அதிகரிப்பு, சலரோகம், குருதியில் PH மட்டத்தில் ஏற்படும் மாறுபாடுகள், குருதி அமுக்க நோய், குருதியில் கொழுப்பின் அளவு அதிகரித்தல், இருதய நோய்கள், ஒஸ்ரியோ போறோசிஸ் போன்ற நோய்களும் ஏற்படும்.


இவ்வாறான ஆபத்தான பானங்கள் திருமண வீடுகளிலும் பொது நிகழ்வுகளிலும் ஏன் நோயாளர்களுக்குக்கூட பரிமாறப்பட்டு வருகின்றன என்பது ஒரு வேதனையான விடயமாகும். இளம் வயதிலேயே பலருக்கு நீரிழிவு நோய், கொலஸ்ரோல் அதிகரிப்பு, நிறை அதிகரிப்பு போன்றவை ஏற்படுவதற்கு அதிகரித்த சோடாப் பாவனை ஒரு முக்கியமான காரணமாக விளங்குகின்றது.

அற்புதமான உணவுகளான முட்டையையும் பாலையும் குடிக்கப் பயப்படும் நம்மவர்களுக்கு ஆபத்தான சோடா வகைகளை போத்தல் போத்தலாக வாங்கிக் குடிக்கும் துணிவு எங்கிருந்து வந்தது? அனைவரும் சுகமாக இருக்க வேண்டும் என்ற சிந்தனை உள்ள எமக்கு பிறருக்கு சோடா கொடுக்க எப்படி மனம் வந்தது? வேலைச் சுகத்துக்காகச் சோடாவைக் கொடுத்து உடற் சுகத்தைக் கெடுத்துக் கொள்வதா? எங்கும் எதற்கும் சோடா கொடுக்கும் பழக்கத்தைப் பார்க்கும் போது "வைதிஸ் கொலை வெறி" என்னும் பாடல்தான் ஞாபகம் வருகிறது.

நாள் பார்த்து; நட்சத்திரம் பார்த்து; முழுவியளம் பார்த்து; சகுனம் பார்த்து; மங்கலகரமாகச் செய்யும் சுபகாரியங்களுக்கும் கூட இந்த ஆபத்தான சோடா வகைகளைப் பரிமாறும் பாரம்பரியம் எங்கிருந்து வந்தது? சோடா குடிக்க வேண்டாம் என்று சொன்னால் "அப்போ தாகத்துக்கு எதைக் குடிப்பது?" என்று கேட்பவர்களுக்கு பதிலாக எதைச் சொல்வது? எம் சந்ததியின் சுகத்துக்காக நாம் சிந்திக்கவேண்டி இருக்கிறது.

காலம் காலமாக நாம் பாவித்து வந்த இயற்கையான பாதுகாப்பான குடிபான வகைகளை நாம் மீண்டும் பாவிக்க முயலுவோம். நின்று கொல்லும் பானமான சோடாவைக் குடிப்பதையும் கொடுப்பதையும் நிறுத்துவோம். இயற்கையான பானங்களான பழரசம், இளநீர், தேசிக்காய்த் தண்ணீர், மழை நீர், மோர், குத்தரிசிக்கஞ்சி, வீட்டிலே தயாரித்த கூழ், சுட்டாறிய நீர், பால், சீனி சேர்க்காத தேநீர், தோடம் பழத்தண்ணீர், ரசம், குடிநீர், சூப் போன்ற பானங்களை அருந்துவது சிறந்தது.

அதிகளவு சீனிச் சத்தும் இரசாயனப் பதார்த்தங்களும் சுவையூட்டிகளும் நிற மூட்டிகளும் சேர்க்கப்பட்டு பல்வேறு வகையான விளம்பரங்களுடன் விற்பனையாகும் சோடா வகைகளிடம் நாம் ஏமாறப்போகிறோமா? வருத்தத்தை விலை கொடுத்து வாங்கப்போகிறோமா? இளம் வயதில் எமது பிள்ளைகளை நீரிழிவு நோயாளியாகப் பார்க்க ஆசைப்



படுகிறோமா? எலும்பு, மூட்டு நோய்களுக்கு ஆளாகி நோவால் அவதிப்படப் போகிறோமா? சோடாவை வாங்கும் முன் இவற்றைச் சிந்திப்போம். அமங்கல பானமான சோடாவை மங்கலகரமான நிகழ்வுகளில் பரிமாறுவதை நிறுத்துவோம். பொது நிகழ்வுகளில் சுலபமாகப் பரிமாறக்கூடிய ஆரோக்கியமான பானங்களைத் தயாரிக்கும் முயற்சியில் இறங்குவோம்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓமிக்ரோன் மாறுபாடு ஆபத்தானது

# முகக்கவசங்களை அணியுங்கள்

## மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**தற்போது பரவி வரும் புதிய கொவிட்-ஓமிக்ரோன் மாறுபாடு ஆபத்தானது மற்றும் சரியாகக் கண்டறிவது எளிதல்ல என்பதால் மக்கள் முகக்கவசங்களை அணியுமாறு மருத்துவ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.**

கொவிட்-ஓமிக்ரோனின் நச்சுத்தன்மை டெல்டா மாறுபாட்டை விட ஐந்து மடங்கு அதிகம் என்றும் இறப்பு விகிதம் டெல்டாவை விட அதிகமாக இருப்பதாகவும் கொழும்பு தேசிய மருத்துவமனையின் மயக்க மருந்து நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த வைரஸ் சமூகத்தில் பரவி நுரையீரலை நேரடியாகப் பாதித்து, வைரஸ் நிமோனியாவுக்கு வழிவகுக்கும், பின்னர் கடுமையான சுவாச



அழுத்தத்தை ஏற்படுத்தும்.

இரட்டை அடுக்கு முகக் கவசங்களை அணிந்து அடிக்கடி கை கழுவ வேண்டும். "இந்த ஓமிக்ரோன் கொவிட் -19 இன் முதல் அலையை விட மிகவும் ஆபத்தானது.

எனவே, நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். மற்றும் கொரோனா வைரஸைத் தடுப்பதை வலுப்படுத்த அனைத்து வகையான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார். (நி-6)

## சுயாதீனமாக செயற்பட டலஸ் அணி முடிவு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியிலிருந்து 15 பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியேற தயாராகியுள்ளனர்.

இந்நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தலைமையில் அவர்கள் சுயாதீனமாக செயற்படுவார்கள் என தெரிய வருகின்றது.

ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக பாராளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பின் போது, டலஸ் அழகப்பெரும போட்டியிட்டார்.

எனினும், ரணில் விக்கிரமசிங்கவுக்கே மொட்டு கட்சி ஆதரவு வழங்கியது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே டலஸ் அணி தனிவழி செல்ல முடிவெடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. (நி-6)

# ஆளுமைமிக்க வைத்தியர் Dr.ப.விக்கினேஸ்வரா



Dr.ப.விக்கினேஸ்வரா அவர்கள் அமரராகி ஐந்து மாதங்களாகின்றன. ஆனால் அவரிடம் சிகிச்சை பெற்ற மக்கள் இன்றும் அவரது திறமைகளையும், சேவைகளையும் புகழ்ந்து நினைவு கூருகின்றனர்.

Dr.ப.விக்கினேஸ்வரா மிகவும் பிரபல்யமான செல்வாக்கு மிகுந்த குடும்பத்தில் பிறந்தவர். யாழ்ப்பாணத்தில் மிகவும் பிரபல்யமான வைத்தியர்களாக விளங்கியவர்கள் அமரர்களான Dr.S.A. வெற்றிவேல், Dr.S.A. தர்மலிங்கம் ஆகியோர் இவரது மாமனார்களாவர். யாழ்ப்பாண முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர்.வெ.யோகேஸ்வரன் இவரது மைத்துனராவார்.

விக்கினேஸ்வரா அவர்கள் கொழும்புத்துறையில் சாமியார் வீதியில், யோகர் சுவாமிகளின் ஆச்சிரமத்திற்கு அருகாமையில் உள்ள இல்லத்தில் 1930 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் திகதி சபாரத்தினம் பரமநாதன் - சண்முகம், அப்புக்குட்டி தங்கரத்தினம் தம்பதியரின் இரண்டாவது பிள்ளையாகப் பிறந்தார்.

தனது மாமனார் Dr.வெற்றிவேல் அவர்களிடமிருந்து பொறுமை, சகிப்புத்தன்மை, இரக்கம், உண்மையாக நடத்தல், கடின உழைப்பு ஆகிய நற்பண்புகளைக் கற்றுக்கொண்டார். கொழும்புத்துறை யோகர் சுவாமிகளின் ஆசீர்வாதம் எப்பொழுதும் கிடைத்துக் கொண்டிருந்தது. நல்லூர்க் கந்தப் பெருமானைத் தினமும் சென்று வழிபாடு செய்திருந்தார். யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரியில் ஆரம்ப வகுப்பு முதல் H. S. C (G.C.E. A/L) வரை கல்வி பயின்றார். தொடர்ந்து கொழும்பு மருத்துவக் கல்லூரியில் அனுமதி பெற்று சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வைத்தியராக வெளியேறினார். தனது 28 ஆவது வயதில் விமலாதேவி அவர்களை திருமணம் செய்து, அவர்களின் இல்லற நல்வாழ்வின் பயனாக அருணா, குமாரராஜன், அமுதன், ஐங்கரன், அரவிந்தன், அகிலா ஆகியோரைத் தமது செல்வங்களாகப் பெற்று மகிழ்ந்தனர்.

1968 ஆம் ஆண்டு சுன்னாகம் தனியார் வைத்திய நிலையத்தை தனது மைத்துனர் Dr.S.நவரட்ணம் அவர்கள், Dr.விக்னேஸ்வரா அவர்களிடம் ஒப்படைத்துவிட்டு உயர் வைத்தியக் கல்விக்காக இலண்டன் பயணமானார்.

Dr.விக்னேஸ்வரா முழுநேர வைத்தியராகச் சேவையாற்றினார். புன்சிரிப்புடன் கூடிய பண்பான, அன்பான உரையாடலும், அழகான கம்பீரமான தோற்றமும் எல்லோரையும் கவர்ந்திருந்தது. பொறுமையாக நோயாளியை சோதிப்பார். எல்லாவிதமான சிகிச்சைகளையும் தனியாக தன்னம்பிக்கையுடன் மேற்கொண்டவர். நச்சு இரசாயனங்களால் ஏற்படும் விபத்துக்களின் காரணமாக விரைந்து வரும் விவசாயிகளின்




உயிரைக் காப்பாற்றி விடுவார். தன்னிடம் வரும் நோயாளிகளை அரச மருத்துவமனையில் அனுமதிக்கும்படி சிபார்சு செய்து அனுப்பியபின் நாளும் அங்கு சென்று அவர்களுக்கு ஆறுதல் கூறுவார்.

இவரது வைத்திய நிலையத்துக்கு இவரைச் சந்திப்பதற்காக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர்.வி.தர்மலிங்கம் உட்பட பல பிரமுகர்களும் வருகை தந்திருந்தனர்.

1992 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதி விமானப்படையின் குண்டுவீச்சின் காரணமாக வைத்திய நிலையக் கட்டடம் தகர்ந்தது. இச் சம்பவத்திற்கு நீண்டகாலத்திற்கு முன் Dr.விக்னேஸ்வரா மோட்டார் வாகனத்தை செலுத்திக்கொண்டு புகையிரத வீதியை கடக்கும்போது விபத்தில் சிக்கியிருந்தார். தந்தையும் மகனுமாக உயிர் பிழைத்தனர்.

பின்பு செல்லாச்சியம்மையார் வீதியிலுள்ள தனது சொந்த இல்லத்திலும், யாழ்ப்பாணத்தில் பிறவுண் வீதியிலுள்ள சொந்த இல்லத்திலும் வைத்திய சேவையைத் தொடர்ந்தார். 2001 ஆம் ஆண்டு ஓய்வெடுப்பதெனத் தீர்மானித்தார். கொழும்பில் சிறிது காலம் தங்கினார். 2009 ஆம் ஆண்டு பிள்ளைகளின் அழைப்பை ஏற்று அவுஸ்திரேலியாவிற்குச் சென்றார். அங்கு மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் எல்லோருடனும் மகிழ்ச்சியுடன் தனது நேரத்தைக் கழித்தார். பிள்ளைகள் இவரை இறுதிவரை தமது சொந்த வீட்டிலேயே அன்புடனும், ஆதரவுடனும் இவரது தேவைகளை கவனித்தனர். நிறைவான வாழ்க்கையை நடாத்திய Dr.விக்னேஸ்வரா அவர்கள் 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி அமைதியாக கந்தன் கழலை அடைந்தார்.

Dr.விக்னேஸ்வரா அவர்கள் சிகிச்சை அளித்த காலத்தை "நோயாளிகளுக்கு ஒரு பொற்காலம்" என மக்கள் வர்ணிக்கின்றனர். பலர் இவரை அரசியல், சமூக செயற்பாடுகளில் ஈடுபடுத்த முற்பட்ட போது "நோயாளிகளுக்கு சேவை செய்வதை விட மேலானது வேறு ஒன்றும் இல்லை" என்று கூறி அவர்களின் கோரிக்கையை நிராகரித்து விடுவார். ஆனால் தேசப்பற்று மிக்கவர். பிள்ளைகளுக்கும் தேசப்பற்றை வளர்த்திருந்தார். விக்னேஸ்வராவின் நினைவாக "ஈழத்தில் மாட்டுவண்டிச் சவாரியும் தமிழர் மரபும்" என்ற நூல் பாலகுமார் அவர்களால் தொகுக்கப்பட்டு அனாமிகா வெளியீடாகக் கிடைக்கப் பெற்றோம். பிள்ளைகளின் தேசப்பற்றை இது எடுத்துக்காட்டுகின்றது.

சுன்னாகத்தில் வைத்திய நிலையக் கட்டட உரிமையாளர் இ.இராமநாதன் மீனாட்சிப்பிள்ளை தம்பதியரும், குடும்பத்தினரும், அயலவர்களும் எப்பொழுதும் உறுதுணையாகவிருந்தனர். அவரது வாகன சாரதியான க.சிவானந்தனும் சாரதியாக மட்டுமல்லாது வேண்டிய பணிகள் அனைத்தையும் நிறைவேற்றினார். Dr.விக்னேஸ்வரா அவர்களின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது எமக்கு மட்டுமல்ல வைத்திய உலகிற்கே ஒரு பேரிழப்பாகும். இறைபதமடைந்த செய்தியைக் கேட்டதும் இப்பகுதி மக்கள் பல்வேறு வழிகளிலும் விக்கினேஸ்வரா அவர்களிற்கு அஞ்சலி செய்து ஆன்மா சாந்தியடைய வேண்டுமென பிரார்த்தித்தனர்.

**"வையத்துள்வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந் தெய்வத்துள் வைக்கப் படும்".**

**க. செல்வகுமாரன் M.A.**
**ஓய்வுநிலை அதிபர்**
**சுன்னாகம்.**

(12232)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கறுப்பு ஜூலையின் 39 ஆவது ஆண்டு நினைவேந்தலானது யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் பல் கலைக் கழகத்தில் உள்ள முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தூபிக்கு முன்பாக நடைபெற்றது. இதன்போது ஈகைச் சுடரேற்றி மாண வர்கள் அஞ்சலி செலுத்தினர். (படம்-சிவசாந்தன், கஜிந்தன்)

# எரிபொருள் விநியோகத்திற்கு இடையூறு விளைவித்த மூவர் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி பரந்தன் எரிபொருள் நிரப்பு நிலையத் திற்கு அருகாமையில் வீதியை மறித்து மக்கள் போக்கு வரத்திற்கு செல்வதற்கு இடை யூறு விளைவித்த குற்றச் சாட்டில் மூன்று பேரை பொலி ஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் எரிபொருள் அட் டையினை பெறாமல் தமக்கு எரிபொருள் வேண்டும் என வும் நடைமுறையிலுள்ள எரி பொருள் அட்டைக்கான எரி பொருள் வழங்கும் நடை முறையினை குழப்பம் ஏற்படு த்த முயன்ற குற்றச்சாட்டிலும் போக்குவரத்திற்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டிலும் கைது செய்யப்பட்டனர்.கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்க ப்பட்டுள்ளதாகவும் கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

(4-6-316)

# போராட்டக்காரர்களை அகற்றியதற்கும் நீதிமன்று உத்தரவிற்கும் தொடர்பில்லை

## பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்

(யாழ்ப்பாணம்)

நீதிமன்ற உத்தரவுக்கும் ஜனாதிபதி செயலக ஆர்ப்பாட் டக்காரர்களை அகற்றியதற்கும் தொடர்பில்லை என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சும ந்திரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி யின் வடமராட்சி அலுவலகத் தில் இடம்பெற்ற ஊடக சந்தி ப்பிலேயே எம்.ஏ.சுமந்திரன் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், ஜே.ஆர். ஜெயவர்த்தன ஜனா திபதியாக இருந்த காலத்தில் 1983 ஜூலைக் கலவரம் ஏற்பட்டு 39 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் ஜூலை மாத த்தில் ஜே.ஆர். ஜெயவர்த் தனவின் உறவினர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருக்கும்போது காலி முகத்தி டல் தாக்குதல் சம்பவம் பதி வாகியிருக்கிறது.

பண்டாரநாயக்க சிலையை சுற்றி 50 மீற்றர் தூரத்திற்கு ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டு அவரை போகக்கூடாது என் பதே நீதிமன்ற உத்தரவு.

நீதிமன்ற உத்தரவுக்கும் ஜனாதிபதி செயலக ஆர்ப் பாட்டக்காரர்களை அகற்றி யதற்கும் தொடர்பில்லை. பண் டாரநாயக்க சிலைக்கும் ஜனா திபதி செயலகத்திற்கும் இடையே அதிக தூரம் உள் ளது.

ஜனாதிபதி செயலகத்தை மீளக் கையளிப்பதாக போராட் டக்காரர்கள் சொன்ன பிறகு இந்த தாக்குதல் அரச படை யினரால் இருட்டில் மேற் கொள்ளப்பட்டது. சர்வதேச சமூகம் இந்தத் தாக்குதலை கண்டித்துள்ளது.

மே 9 தாக்குதலை கண் டித்த ரணில் விக்கிரமசிங்க ஏன் இதனை கண்டிக்கவில்லை. ஒரு சில மணிநேரத்திற்குள் நிறைவேற்றதிகாரம் ரணிலை மாற்றிவிட்டது. குறித்த தாக் குதல் நாட்டை பின்னடைய செய்துவிட்டது. பாசிச அரசின் முடிவு ஆரம்பமாகிவிட்டது எனத் தெரிவித்தார். (4-6-33)

# கடையில் திருட முற்பட்டவர் மடக்கிப் பிடிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி உதயநகர் பகு தியில் வயோதிபரின் கடையில் கைவரிசை காட்டிய திருடனை அப் பகுதி மக்கள் பிடித்து நைய ப்புடைத்து அனுப்பி வைத்து ள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது குறித்த கடையில் வயோதிப அம்மாவிடம் குடிப்பதற்கு தண்ணீர் கொண்டு வந்து தருமாறு கேட்க அவர் தண் ணீர் எடுத்து வர சென்ற போது கடை அலுமாரிக்குள் இரு ந்த பணத்தை திருடிக் கொண்டு ஓடிய வேளை மக்களால் விரட்டி பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டு அனுப்பி வைத்துள்ளனர்.

(4-6)



வரலாற்றுச் சிறப்பு மிக்க மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசுவாமி ஆலய காம் யோற்சவப் பெருவிழாவின் பத்தொன் பதாம் நாள் திருக்கார்த்திகைத் திருவிழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (படம்-ரவிசாந்)

# தாக்குதலை கண்டித்து வவுனியாவிலும் ஆர்ப்பாட்டம்



(குருமன்காடு)

காலி முகத்திடல் போராட் டக்காரர் மீது மேற்கொள்ளப் பட்ட தாக்குதலைக் கண்டித்தும், ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்கவை பதவி விலகுமாறு கோரியும் வவுனியாவில் ஆர் ப்பாட்டம் ஒன்று முன்னெடு க்கப்பட்டது.

வவுனியா பழைய பேருந்து நிலை யம் முன்பாக நேற்று முன்தினம் குறி த்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், "போராட்டக்காரர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை கண்டிக்கின்றோம், முடி வல்ல இதுவே தொடக்கம், போராட்ட பூமியில் மக்கள் உணர்வுகளை தீண் டாதே, வேண்டாம் வேண்டாம் ரணில் விக்கிரமசிங்க, மக்கள் குரலை நசுக் காதே, மக்களின் கருத் துக்களுக்கு மதிப்பளி" என கோசங்களையும் எழு ப்பியிருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் இளை ஞர்கள் பலரும் கலந்து கொண்டி ருந்தனர். (4-6-250)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1990 கிறிஸ்தவம் RC<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: செற்லைற் ரெக்னீசியன் (டோகா)<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12803 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 4<br>கி.பா:26 ½ சூரி 8 செவ் 9 இல்<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்: BSc (Hons)Engineer அவுஸ்திரேலியா<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: G/12804 |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 2<br>கி.பா: 54 சூரி 10 செவ் 1 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: B.Com 3 ஆம் ஆண்டு மாணவி முகாமையாளர் (தனியார்)<br>எதிர்பார்ப்பு: ஆசிரியர் விரும்பத்தக்கது உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/10805 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 3<br>கி.பா:29 ½ சூரி 8 செவ் 6 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L வங்கி உத்தியோகத்தர் (தனியார் வங்கி)<br>எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம் உள்நாடு மட்டும்<br>தொ.இ: G/12806 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 1<br>கி.பா:97 ½ சூரி 5 செவ் 8 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: Civil Engineer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/12808 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மகம் 4<br>கி.பா: 26 சூரி 10 செவ் 12 இல்<br>தகைமை/தொழில்: MD (China Medicine)மருத்துவர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் வைத்தியர் வேண்டாம் உள்நாடு மட்டும்<br>தொ.இ:G/12807 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம் : கேட்டை 2<br>கி.பா: சூரி, செவ் 8 இல்<br>தகைமை/தொழில்:தச்சுத்தொழில்<br>எதிர்பார்ப்பு : சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/10809 | பிறப்பு:1987 இந்து<br>நட்சத்திரம்: திருகோணம் 1<br>கி.பா :25 சூரி 9 செவ் 7 இல்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்:BBA இறுதி வருடம் பிரதி முகாமையாளர் (அரசதொழில்)<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம் (குறைந்தது BSc)<br>தொ.இ:G/12810 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை ஊடுருவும் சூரிய ஒளி போன்றது. அதை யாராலும் மூடி மறைக்க முடியாது.

– மில்டன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## களவினால் ஆகிய ஆக்கம் அளவிளந்து ஆவது போல கெடும்

திருக்குறளின் மொழிபெயர்ப்பைப் படித்த மகாத்மா காந்தி திருக்குறளை அதன்மூல மொழியான தமிழில் படிப்பதற்காக நான் அடுத்த பிறப்பில் தமிழனாகப் பிறக்க வேண்டும் என்றார்.

காந்தியடிகளின் மேற்போந்த கூற்று திருக்குறளின் அற்புதத்தை அதன் மகிமையை சான்றுப்படுத்துகிறது.

ஆம், திருக்குறள் ஒன்றுபோதும் நம் தமிழ் இனத்தின் பெருமையை மார்தட்டிக் கூறுவதற்கு.

உண்மை. அறம், பொருள், இன்பம் எனப் பாயிரம் அமைத்த வள்ளுவன் 133 அதிகாரங்கள் ஊடாக இவ்வுலகுக்குத் தந்தருளிய 1330 குறள்களும் மனித வாழ்வை செம்மைப்படுத்துவன.

ஆம், திருக்குறளைக் கற்று அதன்வழி வாழ்பவன் வானுறையும் தெய்வத்தைச் சென்றடைவான் என்பது நிறுதிட்டமான உண்மை.

தெய்வப்புலவன் வள்ளுவன் எடுத்துரைக்காத தத்துவங்கள் இல்லை எனலாம்.

அந்தளவுக்கு மனித குலத்துக்குத் தேவையான அத்தனையும் அவன் குறளுக்குள் அடக்கம்.

எனினும் அதனை உணர்ந்து கொள்வார் அரிதினும் அரிது எனலாம்.

வள்ளுவப் பெருமான் கூறிவைத்த குறள்களில் ஒன்று

*களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து ஆவது போலக் கெடும்*

என்பதாகும்.

களவினால் கவருகின்ற செல்வம் ஏதோ பெருகுவது போல தோற்றமளித்தாலும் அது இருக்கின்ற செல்வத்தையும் அழித்துவிடும்.

இந்த உண்மையை உலக சாம்ராஜ்ஜிய வரலாறுகள் நமக்கு அனுபவப் பாடமாக அமைகின்றன.

இந்த உண்மையை உணர்வதற்கு இலங்கை நல்லதோர் எடுத்துக் காட்டாகும்.

ஆம், ஆளும் மன்னர்கள் நாட்டின் செல்வத்தைக் கபளீகரம் செய்தால் – மக்களின் சொத்துக்களைக் கவர்ந்தால், அதனால் அவன் செல்வமும் அழிந்து நாடும் வறுமைப் பட்டுப் போகும்.

இதனையே இந்த நாட்டின் அண்மைக் கால அரசியல் நமக்குப் போதித்து நிற்கின்றது.

இந்த உண்மையை உணருகின்ற நாம் இன்றைய பொருளாதார நெருக்கடியில் தட்டுப்பாடான பொருட்களைப் பங்கீட்டின் அடிப்படையில் அனைத்து மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என மனம் வாக்கு காயத்தால் நினைந்தாகுவது அவசியம்.

அதிலும் குறிப்பாக பெற்றோல், டீசல், எரிவாயு என்பன ஏதோவொரு அளவு பிரமாணத்தில் தேவையானவர்களைச் சென்றடைய வேண்டும் என்று எண்ணுவது கட்டாயமானதாகும்.

இதைவிடுத்து வரிசையைக் குழப்பி பங்கீட்டு முறையை சிதைத்து அடாவடித்தனம் புரிந்து எரிபொருளைப் பெறுவதும் பத்து பன்னிரெண்டு மணித்தியாலம் என பொதுமக்கள் கால்கடுக்க வரிசையில் நிற்கையில் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் கறுப்புச் சந்தையில் கண்ணாய் இருப்பதும் களவினால் ஆகிய ஆக்கம் போலவே முடியும் என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது.

# போதையில் இருந்த படையினரே மூர்க்கத்தனமாக தாக்கினர்

## பாஹிங்கல ஆனந்தசாகர தேரர்

(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்திற்கு எதிரில் தங்கியிருந்த போராட்டக்காரர்களை தாக்குவதற்கு வந்த படையினர் அதிகளவில்போதைப்பொருளை பயன்படுத்தியவர்களாக இருந்தனர் என பாஹிங்கல ஆனந்தசாகர தேரர் தெரிவித்துள்ளார்.

போராட்டக்கா்ரர்கள் மீது அதிகாலை நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

படையினர் அனைவரும் போதைப்பொருளை பயன்படுத்தி இருந்தனர் என்பதை நான் பொறுப்புடன் கூறுகிறேன். அந்த சந்தர்ப்பத்தில் கதைத்துக்கொள்ள கூடிய நிலையில் எவரும் இருக்கவில்லை.

படையினர் அனைவரும் மிக மோசமான முறையில்நடந்து கொண்டனர். தாக்குதல் நடத்தும் போது ஜனாதிபதி செயலகத்திற்குள் இருந்த எமது பிள்ளைகளை காப்புற்ற சென்றோம்.

கிறிஸ்தவ மதகுருமாரும், பிக்குமாரும் சென்றோம். படையினரில் எவரும் அனுதாபம் காட்டவில்லை. சட்டத்தரணியை பொல்லுகளால் தாக்கினர். பெருந்தொகையான படையினர் வந்திருந்தனர்.

அவர்கள் தூள் (ஹெரோயின்) பாவித்திருந்தனரா அல்லது ஐஸ் போதைப் பொருளை பயன்படுத்தி இருந்தனரா என்பது எமக்கு தெரியாது. அந்தளவுக்கு படையினரின் நிலைமை மாறியுள்ளது என்றார். (ம-7)

## வடமாகாணத்தில் இன்று

# போக்குவரத்து சேவை ஸ்தம்பிக்கும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்து சபையின் யாழ். சாலை ஊழியர்கள் இன்றைய தினம் பணிப் பகிஷ்கரிப்பினை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளனர்.

யாழ். சாலை முடங்குவதால் .அதனுடன் இணைந்த சாலைகளின் செயற்பாடுகளும் பாதிக்கப்படுமென யாழ். சாலை ஊழியர்கள் கூட்டாக அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் யாழ். சாலை ஊழியர்கள் இதனை கூட்டாக அறிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி புறப்பட்ட 57 வழித்தட இ.போ.ச பேருந்தின் சாரதி மற்றும் காப்பாளர் இருவரும் கல்கமுவ சாலை இ.போ.ச சாலை ஊழியர்களினால் தலாதகம எனும் பகுதியில் தாக்கப்பட்டுள்ளனர்.

இத் தாக்குதல் சம்பவத்தை மிகவும் வன்மையாக கண்டிக்கின்றோம். இந்த தாக்குதலை நடாத்திய ஊழியர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்களே எமது சக ஊழியர்களை தாக்கியது எமக்கு மிகவும் சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலோடு தொடர்புபட்ட ஊழியர்களை உடனடியாக பொலிஸார் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சட்ட நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் இன்றைய தினம் இலங்கைப் போக்குவரத்து சபையின் யாழ். சாலை வட பிராந்திய சாலைகளுடன் இணைந்து தொழிற்சங்க போராட்டங்களை முன்னெடுக்க இருக்கின்றோம் என்றனர். (ம-7)

# பாடசாலை சேவை வாகனங்களுக்கு டிப்போ ஊடாக எரிபொருள் விநியோகம்

பாடசாலை சேவையில் ஈடுபடும் பேருந்து மற்றும் சிற்றூர்ந்து ஆகிய வாகனங்களுக்கு நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து இலங்கை போக்குவரத்து சபை டிப்போ ஊடாக எரிபொருள் வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

எரிபொருள் நெருக்கடி மற்றும் அது தொடர்பில் இனிவரும் காலங்களில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நேற்று முற்பகல் பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது ஜனாதிபதி இந்த அறிவுறுத்தலை வழங்கினார்.

கல்வி, மீன்பிடி, சுற்றுலா, விவசாய நடவடிக்கை மற்றும் பொது போக்குவரத்து சேவை சேவையில் ஈடுபடும் தனியார் மற்றும் அரச பேருந்துக்காக அவசியமான எரிபொருள் விநியோகத்தை ஒழுங்குபடுத்தல் மற்றும் விரைவு படுத்துவது தொடர்பில் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.(ம-7)

# 33,600 லீற்றர் பெற்றோலுடன் பவுஸர் ஒன்று விபத்து

(கொழும்பு)

மீரிகம தங்கொவிட்ட வீதியில் ஹலுகம மலையில் நேற்று பிற்பகல் பெற்றோல் ஏற்றிச் சென்ற பவுஸர் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

முத்துராஜவெலயிலிருந்து பேராதனைக்கு கொண்டு செல்லப்பட்ட 33,600 லீற்றர் பெற்றோல் இந்த பவுஸரில் இருந்துள்ளது.

ஹலுகம மலை பகுதியில் குறித்த பவுஸர் திடீரென பின்னோக்கிச் சென்றதால் இந்த விபத்து நேர்ந்துள்ளதாக ஆரம்ப விசாரணையில் தெரிய வந்துள்ளது.(ம-7)

# கழுத்தில் கயிறு இறுக்கியதில் 11 வயது சிறுவன் மரணம்

மட்டக்களப்பு - பாரதி வீதியிலுள்ள வீடொன்றில் கட்டப்பட்ட கயிறு கழுத்தில் இறுகி 11 வயது சிறுவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

குறித்த வீட்டின் முன் பகுதியிலுள்ள விறாந்தையின் கூரையில் பொருட்களை நிறுப்பதற்கான தராசுக்காக நயிலோன் கயிறு கட்டப்பட்டிருந்தது.

இதன்போது தனிமையில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் குறித்த கயிற்றில் கழுத்தை உள்நுழைத்து விளையாடிக் கொண்ட நிலையில், கயிறு கழுத்தில் இறுகி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற் [illegible] நாளை 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வவுனியா பிரதேசத்தில் [illegible] இடத்தில் மின்சாரம் தடைப்படும்.

# ஆடிப்பூர நிகழ்வும் இலட்சார்ச்சனையும்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையின் ஆடிப்பூர நிகழ்வு எதிர்வரும் முதலாம் ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் அதனை முன்னிட்டு எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை அம்பிகைக்கு விசேட அபிஷேகமும் இலட்ச்சார்சனையும் நடைபெற்று அம்பிகை உள்வீதிவலம் வருவார். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தானிய ஏற்றுமதிக்கான ஒப்பந்தத்தில் ரஷ்யா,உக்ரைன் கைச்சாத்து

(துருக்கி)

**உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் காரணமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியாத நிலையில் உக்ரைனில் முடங்கிக்கிடக்கும் தானியங்களை மீண்டும் ஏற்றுமதி செய்வதற்கு வழிவகை செய்யும் ஒப்பந்தத்தில் ரஷ்யாவும் உக்ரைனும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கையொப்பமிட்டன.**



ஐ.நா. மற்றும் துருக்கியின் மத்தியஸ்த்தத்துடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து துருக்கியின் இஸ்தான்புல் நகரில் நேற்று முன்தினம் ஒப்பந்தம் கையொப்பமானது.

இதையடுத்து, கருங்கடல் பகுதியில் தடை செய்யப்பட்ட வர்த்தக வழித்தடங்களை மீண்டும் திறக்கவும் உணவுப் பொருள் பற்றாக்குறை அபாயத்திலிருந்து உலக நாடுகளைப் பாதுகாக்கவும் வழி ஏற்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் நிகழ்வில் ஐ.நா. பொதுச் செயலர் அன்டோனியோ குட்டேரஸ், துருக்கி ஜனாதிபதி எர்டோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த ஒப்பந்தம் குறித்துக் கருத்து வெளியிட்ட ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டேரஸ், தற்போது கையொப்பமாகியுள்ள ரஷ்யா - உக்ரைன் ஒப்பந்தத்தின் மூலம் கருங்கடல் பகுதியில் நம்பிக்கை ஒளி ஏற்றப்பட்டுள்ளது: அந்த ஒளி, புதிய சாத்தியக் கூறுகளாகவும் நிம்மதி உணர்வாகவும் பிரதிபலிக்கிறது. இந்த ஒப்பந்தத்தால் உணவுப் பொருள் பற்றாக்குறை நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள பல்வேறு வளரும் நாடுகளின் ஏழை மக்கள் நிம்மதியடைவர்கள் எனத் தெரிவித்தார். அதேநேரம் ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையே சமாதானம் ஏற்பட இந்த ஒப்பந்தம் தொடக்கப் புள்ளியாக இருக்கும் என துருக்கி ஜனாதிபதி எர்டோகன் நம்பிக்கை தெரிவித்தார். (நி-6)

## புகுஷிமா அணுமின் நிலைய கழிவு நீரை கடலில் விட ஜப்பான் திட்டம்

(டோக்கியோ)

ஜப்பானில் சிதைவுக்குள்ளான புகுஷிமா டாய்-இச்சி அணுமின் நிலையத்தில் சேமிக்கப்பட்டுள்ள கழிவு நீரை கடலில் விடுவதற்கான திட்டத்திற்கு ஜப்பான் அணுசக்தி கட்டுப்பாட்டாளர்கள் ஒப்புதல் அளித்துள்ளதாக ஜப்பானிய அரசாங்கம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளது.

ஜப்பானில் கடந்த 2011 ஆம் ஆண்டு ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கம் மற்றும் சுனாமியைத் தொடர்ந்து அடுத்தடுத்து புகுஷிமா டாய்-இச்சி அணுமின் நிலையத்தில் 4 அணு உலைகள் வெடித்துச் சிதறின. அடுத்தடுத்து அணு உலைகள் வெடித்துச் சிதறியதைத் தொடர்ந்து ஜப்பானில் அணுக் கதிர்வீச்சு பீதி பரவியது.

இந்நிலையில் அணு உலைகளை குளிர்விக்க பெருமளவு நீர் பயன்படுத்தப்பட்டது.

இந்த நீரில் அணு கதிர்வீச்சு அபாயம் உள்ளதாக எச்சரிக்கப்பட்டதால் ஆலையில் உள்ள பெரிய தொட்டிகளில் இந்த நீர் சேமிக்கப்பட்டுள்ளது. இந்த நீரின் கொள்ளளவு 1.3 மில்லியன் தொன்களுக்கும் அதிகமாக உள்ளது.

இந்நிலையில் இந்த தண்ணீரை கடலுக்குள் விடுவது பாதுகாப்பானது என ஜப்பானிய அணுசக்தி கட்டுப்பாட்டாளர்கள் கருதுகின்றனர்.

எனினும் புகுஷிமா டாய்-இச்சி அணுமின் நிலையத்தில் சேமிக்கப்பட்டுள்ள நீரை கடலில் விடுவதற்கான திட்டத்திற்கு இப்பகுதியில் உள்ள மீனவ தொழிற்சங்கங்கள் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. அண்டை நாடுகளான சீனா, தென் கொரியா மற்றும் தாய்வானும் ஜப்பானின் இந்த முடிவு குறித்து கவலை தெரிவித்துள்ளன.(நி-6)

## 270 மில்லியன் அமெரிக்க டொலர்கள் உக்ரைனுக்கு வழங்கும் அமெரிக்கா



(வோஷிங்டன்)

உக்ரைனுக்கு கூடுதல் 270 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பாதுகாப்பு உதவியை, அமெரிக்கா அனுப்பும் என்று வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

இதில், நடுத்தர தூர ரொக்கெட் அமைப்புகள் மற்றும் தந்திரோபாய ஆளில்லா விமானங்கள் உள்ளடங்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

## சுயஸ்கால்வாயில் 135 ஆண்டுகளில் இல்லாதளவு வருமானம் அதிகரிப்பு

(எகிப்து)

எகிப்தின் மிக முக்கிய வருவாய் ஆதாரமாக சுயஸ் கால்வாய் திகழ்ந்து வருகிறது . இந்த கால்வாய் மூலம் 2021 ஜூலை மாதம் முதல் 2022 ஜூன் மாதம் வரை , எகிப்து அரசாங்கத்துக்கு கடந்த 135 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு சுமார் 7 பில்லியன் டொலர் வருமானம் கிடைத்துள்ளது

கடந்த வருமானத்தை விட இது 20.7 சதவீதம் அதிகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது . கடந்த ஆண்டு சுயஸ் கால்வாயில் எவர் கிரீன் என்ற சரக்குக் கப்பல் அகப்பட்டுக் கொண்டதால் சுமார் ஒரு வார்த்திற்கு கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டது . இதனால் நாள் ஒன்றுக்கு சுமார் ஆயிரம் கோடி டொலர் வர்த்தக இழப்பு ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 200 | 300 |
| உருளைக்கிழங்கு | 240 | 220 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 400 | 550 | 500 | 600 |
| தக்காளி | 300 | 300 | 270 | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 320 | 350 | 200 |
| கோவா | 340 | 300 | 300 | 350 |
| கரட் | 250 | 350 | 360 | 400 |
| பூசணி | 160 | 300 | 200 | 250 |
| புடோல் | 160 | 120 | 200. | 200 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 200-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 230 | 220 | 200 | 240 |
| பாகற்காய் | 300 | 300 | 300 | 500 |
| வெண்டக்காய் | 100 | 120 | 120 | 320 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 240 | 280 |
| பயற்றங்காய் | 120 | 120 | 100 | 320 |
| லீக்ஸ் | 200 | 250 | 250 | 300 |
| பீற்றூட் | 250 | 250 | 280 | 300 |
| கறிமிளகாய் | 600 | 500 | 600 | 500 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 350 | 400 |
| போஞ்சி | 400 | 450 | 430 | 500 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | -- | 270 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 150 | 120 |
| தேசிக்காய் | 300 | 250 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 40-80 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 250 | 250 | 260 |
| வெங்காயப்பூ | 250 | 300 | 300 | 400 |
| முள்ளங்கி | 140 | 120 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 100 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | 100 | 100 | -- | 150 |

## எட்டு பில்லியனை தாண்டும் உலக சனத் தொகை



(ஜெனீவா)

நவம்பர் 15 ஆம் திகதிக்குள் உலக மக்கள் தொகை எட்டு பில்லியனைத் தாண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை கணித்துள்ளது.

இது 2030 இல் 8.5 பில்லியனாக இருக்கும் என்றும் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிறக்கும் போது ஆயுட்காலம் அதிகரிப்பதால் இறப்பு விகிதம் குறைவதே இதற்கு முக்கிய காரணம் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

2080 இல் உலக மக்கள் தொகை 10.4 பில்லியனாக உயரும் என ஐக்கிய நாடுகள் சபை கணித்துள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணிலுக்கு சிறிது...

வாரிசு அவர் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார். மேலும் தெரிவிக்கையில்,

இது வெற்றி கொள்ளக்கூடிய நெருக்கடி, இதற்குத் தீர்வு இருக்கின்றது. எரிபொருள், சமையல் எரிவாயு வரிசைகளுக்கு மூன்று மாதங்களுக்குள் எமக்கு தீர்வை வழங்க முடியும். தீர்வு இருக்கின்றது.

அதேபோல் நாட்டில் ஏற்படப் போகும் உணவு நெருக்கடியை சமாளித்து வெற்றி பெற முடியும். மக்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க முடியும்.

எனினும் புதிய ஜனாதிபதியின் ஊடாக எமக்கு இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியுமா என்பதை இன்னும் சிறிது காலம் சென்ற பின்னரே அறிய முடியும். ரணில் விக்கிரமசிங்க மீது சிலர் தற்போது நம்பிக்கை வைத்துள்ளனர். அதற்கு நாம் இடமளிக்க வேண்டும் என்றார். (ம-7)

## வாரத்தில்...

ளின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் எதிர்வரும் 25 ஆம்திகதி திங்கட்கிழமை மீண்டும் தொடங்கவுள்ளதாக கல்வி அமைச்சினால் அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, மறு அறிவித்தல் வரை திங்கள், செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய நாட்களில் பாடசாலைகள் நடத்தப்படும் என்றும் புதன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் மாணவர்கள் வீட்டிலிருந்து கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட முடியும் எனவும் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

அவ்வாறில்லாவிடின் புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் இணையவழி கற்றல் மற்றும் கற்பித்தல் நடவடிக்கைகளை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

## தாக்குதல் தொட...

ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதி செயலகத்துக்கு அருகில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்கள் மற்றும் நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் விவாதம் நடத்துமாறும் பிரதமரிடம் கோரப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சிகளின் கொறடாவான ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல இது தொடர்பான கோரிக்கையைப் பிரதமரிடம் முன்வைத்துள்ளார். (ம-7)

## ஒன்றுகூடும் சுத...

அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

காலி முகத்திடல் பகுதியில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் அறிவிப்பதற்காக கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதேவேளை, பொது மக்கள் சார்பாக தீர்மானங்களை மேற்கொள்ளும் பிரதான அலுவலகமாக ஜனாதிபதி செயலகம் காணப்படுவதாகவும் ஜனாதிபதி ஒருவர் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் குறித்த செயற்பாடுகளுக்காக அந்த இடத்தை விடுவிப்பது பொலிஸாரின் பொறுப்பாகும் எனவும் பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். (ம-7)

## ஜீஎஸ்பி வரிச்சலு...

தெரிவித்துள்ளது.

அமைதியாக ஒன்றுகூடுவதற்கும் பேச்சுச் சுதந்திரத்திற்குமான பொதுமக்களின் உரிமையை உறுதிப்படுத்துமாறு ஐரோப்பிய ஒன்றியம் அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், சட்டத்தின் ஆட்சி மற்றும் நல்லாட்சி கொள்கைகளைப் பாதுகாப்பதற்கும் நிலையான வேலைத்திட்டத்தை தயாரிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

கடந்த சில வருடங்களில் இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் 01 பில்லியன் யூரோக்கள் உதவி வழங்கியுள்ளதாகவும் ஐரோப்பிய ஒன்றியம் குறித்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## எரிபொருள்...

திபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்தார்.

எரிபொருள் பிரச்சினை மற்றும் அதன் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் பிரதமர் அலுவலகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இவ்வாறு பணிப்புரை விடுத்தார்.

கல்வி, மீன்பிடி, சுற்றுலா, விவசாயம் மற்றும் பொதுப் போக்குவரத்தில் ஈடுபடும் தனியார் மற்றும் அரச பேருந்துகளுக்கு வழக்கமான மற்றும் விரைவான எரிபொருள் விநியோகம் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## தமிழர்களின் பிர...

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தெரிவுக்கான வாக்களிப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை எடுத்த தீர்மானம் தொடர்பில் இனி நாம் பதிலளிப்பது அழகு அல்ல. எனினும், பாராளுமன்றத்தில் ஜனாதிபதியாகத் தெரிவாகிய அன்று சபையில் உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க, தன்னுடன் இணைந்து பயணிக்க சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

எனவே, ஜனாதிபதி மீது நம்பிக்கை வைத்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செயற்பட வேண்டும். தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதியும் நானும் அதீத கவனத்துடன் செயற்படுவோம்" என்றார். (ம-7)

## இரு...

தில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களின் எண்ணிக்கையை 30 ஆகவும் பிரதியமைச்சர்களின் எண்ணிக்கையை 32 ஆகவும் அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கான பேச்சுவார்த்தைகளை அரசியல் கட்சிகளுடன் மாத்திரமன்றி போராட்டகாரர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதனடிப்படையில் பதவியேற்ற 18 அமைச்சர்களுக்கு மேலதிகமாக 12 அமைச்சர்கள் பதவியேற்க உள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த சிலருக்கு அமைச்சு பதவிகள் கிடைக்க உள்ளதாக தெரியவருகிறது.

இவர்களில் மனோ கணேசன், றிசாற் பதியுதீன், பழனி திகாம்பரம், ஜீவன் தொண்டமான் ஆகியோரும் அடங்குவதாக கூறப்படுகிறது.

அத்துடன் நிதியமைச்சர் பதவியை ஜனாதிபதியின் பொறுப்பின் கீழ் வைத்திருப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மனித உரிமை...

ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான தாக்குதல் குறித்து அச்சமடைந்துள்ளேன்.

இலங்கை ஜனாதிபதியை இலங்கை மக்களின் ஜனநாயக அபிலாசைகளுடன் ஈடுபாட்டை காட்டுமாறும் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் பரந்துபட்ட தேவைகளை பூர்த்தி செய்வதற்காக பாடுபடுமாறு நான் வலியுறுத்திக் கேட்கின்றேன்.

அனைத்தையும் விட மனித உரிமைகளை பாதுகாக்க வேண்டும்." என்றும் செனட் வெளியுறவு குழுத் தலைவர் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். (ம-7)

## யாழ். பல்கலை...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கறுப்பு ஜூலை நினைவுதினம் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயிலின் அருகே அமைந்துள்ள பிரதான கொடிக்கம்பத்தில் கறுப்பு கொடியேற்றப்பட்டு அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டது.

இதனையடுத்து பல்கலைக்கழக பிரதானதூபி வளாகத்தில் கறுப்பு ஜூலை நினைவுருவ படத்திற்கு மாணவர்களால் ஈகைச் சுடரேற்றப்பட்டதோடு, மலரஞ்சலியுடன் அகவணக்கம் செலுத்தப்பட்டது.

மேலும் 1983 கறுப்பு ஜூலை வாரத்தில் தமிழிர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பான நினைவுரையும் இடம்பெற்றது. (ம-7.18.33)


### மஹஜன சம்பத
திகதி 2022/07/23
சீட்டிழுப்பு இலக்கம் 4825
G 3 3 7 5 6 0
தேசிய லொத்தர் சபை

### ஹந்தஹன
சீட்டிழுப்பு திகதி 2022.07.23
சீட்டிழுப்பு இலக்கம் 134
மிதுனம் 13 38 48 56 மிதுனம்
தேசிய லொத்தர் சபை

### ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 23/07/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1303
மேஷம் 0 5 7 7 4 8
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்
திகதி 23/07/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1173
G 15 03 15 34 77

### கொவிசெத
திகதி 2022.07.23
சீட்டிழுப்பு இலக்கம் 3067
Z 13 16 50 78
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய
திகதி -2022.07.23
சீட்டிழுப்பு இலக்கம் - 855
Z 12 46 51 54

### அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1626
வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2022.07.23
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,675,880/-
வெற்றி இலக்கங்கள் 02 09 64 76 Q

### சனிதா
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.07.23
சீட்டிழுப்பு இல: 3961
வர்ணம்: பச்சை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,382,660/-
வெற்றி இலக்கங்கள் 05 11 49 59 C

### ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,165,978/-
திகதி 2022-07-23
வெற்றி வாரம் 3512
வர்ணம் இள நீலம்
வெற்றி இலக்கங்கள் 30 31 45 46 சிம்மம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,979,220/-

### லக்ன வாசனா
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
I 38 11 24 30 50
சீட்டிழுப்பு வாரம் 976
சிவப்பு
2022.07.23 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 249,305,215/-
தொலைபேசி: 011-2 333 546-47
Web: www.dlb.lk

### சம்பத்தின வாசனா
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 512
திகதி 2022-07-23
வர்ணம் சிவப்பு
Z 05 10 23 03
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 11,430,196/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1800
நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022.07.23
தினம் சனிக்கிழமை
E 30 32 39 61
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,728,820/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விமலம் திருமண சேவை

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன் / மணமகள் தேவையெனில் எம்முடன் தொடர்பு கொள்ளவும். வெளிநாட்டு மணமகன் / மணமகள் தாராளமாக உள்ளனர்.

விமலம் திருமண சேவை

தொடர்பு:- +1437 244 6737 CANADA
076 349 0083 SRI LANKA

(12200)

## இராஜ மருத்துவம்

குழந்தைகள் கிரந்தி, அவியல், சளி, இருமல், செவ்வாப்பு, கிரந்தி முட்டு கணை நோய்களுக்கும் குளோகோமா, சூதக வலி, ஆனந்த வாயுவுக்கும் சிகிச்சை பெறவும், கோறோசனை மாத்திரை கிரந்தி எண்ணெய் பெற்றுக் கொள்ளவும்

பேரறிஞர் Dr.K. பாலசுப்பிரமணியம்
சிறப்பு ஆலோசகர்

(12214)

076 274 4488 வல்லை வீதி, சங்கானை.

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள பண்ணைக்கு வேலையாட்கள் தேவை.

தொடர்பு: (C-4647)
077 704 8972

## A/L PHYSICS & CHEMISTRY

Personal & Group Classes

(12240)

076 322 0916

## மணமகள் தேவை

யாழ்ப்பாணம் வலிகாமம் இந்து கௌரவ குடும்பம், விஞ்ஞான பட்டதாரி (M.Sc), 1988ஆம் ஆண்டு பிறந்த ஆசிரிய உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு அரச உத்தியோகத்தில் மணமகள் தேவை. கிரக பாவம் 23, நட்சத்திரம் பூரட்டாதி 1-ம் பாதம்

தொடர்புகளுக்கு (12211)
077 154 7579

## மணமகள் தேவை

யாழ். இந்து 1978 அரச உயர் பதவியில் இருக்கும் அழகிய மணமகனுக்கு தகுந்த வரனை எதிர்பார்க்கின்றோம். செவ்வாய் குற்றம் இல்லை, விவாகரத்தானவர். (இந்து, கத்தோலிக்கம் பரவாயில்லை)

(12212)

076 690 1212

## 72 பேருக்கு தொற்று

(கொழும்பு)

இலங்கையில் மேலும் 72 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன்படி, இலங்கையில் மொத்தமாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 664,844 ஆக அதிகரித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களில் 687 பேர் மருத்துவமனையிலோ அல்லது வீட்டிலோ மருத்துவ மேற்பார்வையின் கீழ் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும் 647,620 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.


இதேவேளை, மேலும் இருவர் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்ததாக சுகாதார சேவைகள் பணிப்பாளர்நாயகம்தெரிவித்துள்ளார்.(ம-7)

## வீடு விற்பனைக்கு

திருநெல்வேலி அம்மாச்சி உணவகத்திற்கு அண்மையில் மாபிள் பதித்த சகல வசதியும் கொண்ட வடக்கு வாசல் வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு: (12229)
077 082 1010, 077 441 0919

## சிரட்டைக்கரி அடுப்புகள் விற்பனைக்கு



யாழ்ப்பாணத்தில் சிரட்டைக்கரி அடுப்புகள் விற்பனைக்கு உண்டு.

(12231) தொடர்பு
077 885 2450

## மணமகள் தேவை

யாழ்.இந்து குடும்பத்தைச் சேர்ந்த 1983 பிறந்த பூரட்டாதி, கும்பம், M.Sc.Eng.UK உயர் கல்வி கற்ற பண்பான மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு (12195)
077 691 4298
077 342 7645

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்க்ழக ஆசிரியரினால்

IELTS, A1UK EXAM , ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- Guaranteed to 7.5 in IELTS Exam.
- Pass in UK A1 Exam.
- Exam Registration center.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

(12132)

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam junction, jaffna.

TP: 077 780 3970, 074 007 1970

## காணி விற்பனைக்கு

58/1, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (பலாலி வீதி, திருநெல்வேலி கெற்றப்போல் சந்தியிலிருந்து பழம் வீதியில் சுமார் 200 m தூரம் அளவில்)

(C-4649)

தொலைபேசி:
077 977 3732

## வட இந்திய காசி யாத்திரை

ஆரம்பம் 04.09.2022 நாட்கள் 12

டெல்லி, மதுரா, தாஜ்மஹால், அலகாபாத், திருவேணி சங்கமம், கயா, புத்தகயா, புத்தாலயங்கள், காசி விஸ்வ நாதர், இராமேஸ்வரம், மதுரை, பிரம்மபுரீஸ்வரர் சிவன், சென்னையில் ஒரு நாள் சொப்பிங்.


அனைத்துச் செலவுகளும் உட்பட விபரங்கட்கு:
கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன்
T.P: 077 768 0102

(12234)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்றுறை செல்லும் பிரதான வீதியில் 27 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

Booking



- யாழ். நகரத்தில் இருந்து 4 Km தூரத்தில் அமைந்துள்ளது
- 18 அடி பாதையுடன் 3 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- வீடுகள் அமைப்பதற்கும் களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் மற்றும் அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணிமுதல் மலை 6.00 மணிரை

ஜெயம்: தரகர் தேவையில்லை

(12207)

077 814 7389, 077 241 7589

## நீர்க்கசிவு பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு

## Water Proofing

- மழை காலங்களில் உங்கள் கட்டடங்கள், வீடுகள், கோவில்களில் ஏற்படும் நீர்க்கசிவினைத் தடுப்பதற்கு Finex ஸ்தாபனத்தாரின் அசல் கட்டட இரசாயனப் பொருட்களை கொள்வனவு செய்யும் போது Finex ஸ்தாபனத்தில் அனுமதி பெற்ற முகவர்களாகிய எம்மிடம் மட்டும் பெற்றுக்கொள்ளவும். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.
- 10 வருட உத்தரவாதத்துடன் நிரந்தரமாக சீர்செய்யப்படும்.

போலி இரசாயனத்துடன், போலி முகவர்கள் உங்கள் இல்லம் தேடி வந்து வேலை கேட்பார்கள். ஏமாற வேண்டாம்.

உலகத்தரம்மிக்கது
வட மாகாணத்தில் முதன் முதலில் அறிமுகம் செய்தவர்கள்

(12238)

FINEX இரசாயனப் பொருட்களை விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.

North and East Engineering
55, Stanly Road, Jaffna, Sri Lanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000

## காணி விற்பனைக்கு

யாழ். நாவற்குழி சந்தியில் 81 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- ❖ A9 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்.
- ❖ நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரத்தில்.
- ❖ மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- ❖ A9 வீதியில் இருந்து 200m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை நான்கு இலட்சம் (400,000/=) மட்டும்.
- ❖ இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.

❖ பார்வையிடும் நேரம் : காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

(12199)

076 490 5403, 076 491 2493, 076 490 6029

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.